திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 98 பகுதி : 4 ஏப்ரல் 2004

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 98
பகுதி : 4
*ஏப்ரல் 2004*

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.1201911

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ் மணம் 115

வள்ளுவத்தின் இயற்பியல் கூறுகள் 117

முனைவர்.மெ.மெய்யப்பன்

திருமந்திரப் பாட வேறுபாடும்
உரைகாரர் இடர்ப்பாடும் 121

டாக்டர் சுப.அண்ணாமலை

மொழி ஆய்வு 130

முனைவர் கி. அரங்கன்

நெற்கூர நாடு 147

திரு செ.மா.கணபதி

# இதழ் மணம்

பேராசிரியர் மெ.மெய்யப்பன் அவர்கள் வள்ளுவத்தில் இயற்பியல் கூறுகள் என்னும் தலைப்பில் ஐந்தாவது கட்டுரையாக "வரம்பும் வளமும்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார்கள். வரம்பும் வரம்பு மீறுதலும் எத்தகைய சாதகபாதகங்களை உண்டாக்குகின்றன என்பதை இயற்பியல் வழி நின்று விளக்கும் நுட்பம் கற்று இன்புறத்தக்கது. அறிவு, அன்பு, கல்வி என்று வாழ்க்கைப் பயன்பாடுகள் எத்தனையோ இருக்க பெரும்பாலும் மக்கள் பொருள் பெருக்கத்திற்கே கவலையுற்று அலைவதை ஆசிரியர், "தேவைக்கு அதிகமாய் ஒருவன் செல்வத்தை ஈட்டும் வாய்ப்பைப் பெறுவானேயானால், இயற்கையின் ஓர் அடிப்படைக்கூறான உயிரில்லாத அணுக்கள் உமிழும் சிறங்கோவ் கதிர் வீச்சுகளைப் போல அவற்றைச் சமுதாயத்திற்காக அவன் உமிழவேண்டும்" என்னும் செய்தி அரிதின் இன்புறத்தக்கது.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் "திருமந்திரப் பாடவேறுபாடும் உரைகாரர் இடர்ப்பாடும்" குறித்த கட்டுரை நுண்ணிதின் ஆய்ந்தகல்விப் புலத்தின் வெளிப்பாடு. பேராசிரியர் அவர்கள் அண்மையில் திருமந்திரத்திற்கு உரை எழுதி வெளியிட்டார்கள். ஏற்கனவே மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், பெரும்புலவர் அருணை வடிவேல் முதலியார் போன்ற அருந்தமிழாளர்கள் உரைகண்ட நூலுக்கு இவர் உரை எழுத வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி பலர் உள்ளத்தில் தோன்றியிருக்கலாம். திருக்குறளுக்கு அண்மைக்காலத்தில் பலரும் உரை எழுதுவது போல இருக்குமோ என்ற ஐயம் எழுவது இயல்பு. பேராசிரியருடைய இக்கட்டுரை பலருடைய சிந்தனையை தெளிவடையச் செய்யும் வகையில் அமைந்துள்ளது.

மகாவித்துவான் அவர்களும் அருணைவடிவேல் முதலியார் அவர்களும் சித்தாந்தநூல்களில் ஊறித்திளைத்தவர்கள். இருவரும் திருமந்திரமூலபாட ஆய்வு மேற்கொள்ளாமல் உரை வகுத்தனர் என்பது வியப்புக்குரியது. சிறுவயதுமுதல்பாடம் பண்ணிய நூல் வகையைச் சார்ந்தது இந்நூலாகையினால் மூலபாடத்தில் கவனம் செலுத்தாது விட்டாரோ என எண்ணத்

தோன்றுகிறது. மேலும் அப்பெரியார், "இவ்வுரையில் அடியேற்குச் சீவபோதம் முற்பட்ட இடத்தெல்லாம் பிழைகள் மலிந்து காணப்படுதல் இயற்கை" எனத்திருமந்திர முன்னுரையில் குறித்துள்ளது நினைவுகூரத்தக்கது.

எனவே பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்களுடைய புதிய உரை காலத்தின் தேவை. இருபெரும் புலவர்களும் மூலபாடத்தை ஒப்பிடாமல் செய்த குறையை ஆய்ந்து உணர்ந்த பேராசிரியர் அவர்கள் அறிஞர் உலகம் போற்றும் வண்ணம் பல்வேறு சுவடிகளை ஆய்ந்து தம்புலமைத்திறத்தால் அரிய உரை ஒன்றை எழுதியது தமிழ்த் தெய்வத்திற்கு அவர் ஆற்றிய பெரும் தொண்டாகும். இக்கட்டுரையைக் கண்ணுறும் தமிழறிஞர்கள் திருமந்திரத்திற்குப் பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் எழுதிய உரையைப் பிற உரைகளோடு ஒப்பிட்டுத் திருமந்திரச் சுவை நலம் பருகுவர் என்பது திண்ணம்.

பேராசிரியர் முனைவர் கி.அரங்கன் அவர்கள் "மொழி ஆய்வு" என்னும் தலைப்பில் அறிஞர் கா.சிவத்தம்பி அவர்கள் எழுதிய "இலக்கணமும் சமூக உறவுகளும்" என்னும் நூலைத் திறனாய்வு செய்துள்ளார்கள். தொல்காப்பியம், நன்னூல் ஆகிய நூல்களில் பதிந்துள்ள சமூகச் சுவடுகளைத் திறம்பட விளக்கும் நயம் இன்புறத்தக்கது. தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பயன்பாடுடைய கட்டுரை. அறிஞர் பெருமக்கள் கட்டுரையின் நுட்பம் அறிந்து மாணவர் உலகத்திற்கு எடுத்துரைப்பர் என நம்பலாம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செம்பாகமாக விளங்கும் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் செ.கந்தசாமி எம்.ஏ.,பி.எச்.டி., அவர்கள் முப்பது ஆண்டுகள் செந்தமிழ்க் கல்லூரி ஆசிரியர் முதல்வர் பணியோடு சங்கப்பணியும் செந்தமிழ் இதழ்ப் பணியும் சிறப்புற நற்றொண்டு ஆற்றி இத்திங்கள் ஓய்வு பெறுகிறார்கள். அவர்கள் பணிவும் இன்சொல்லும் பெருமித நோக்குமுடைய சான்றோர்; தமிழ்ச்சங்கம் டாக்டர் ந.சேதுராமன் அவர்கள் தலைமையில் விருந்தும் சிறப்பும் அளித்துப்பாராட்டியது. பேராசிரியர் செ.கந்தசாமி அவர்கள் சுற்றமும் நட்பும் சூழ நெடிது இனிது வாழ்ந்து தமிழ்த்தாய்க்குப் பணியாற்றச் செந்தமிழ் வாழ்த்துகிறது.

– *பதிப்பாசிரியர்*

# வள்ளுவத்தின் இயற்பியல் கூறுகள்

## 5. வரம்பும் வளமும்

*முனைவர்.மெ.மெய்யப்பன்,*
*இயற்பியற் பேராசிரியர்,*
*காரைக்குடி.*

இயற்பியலின் வலியறிந்து ஒரு குறள் படைக்கப்பட்டுள்ளது.

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்" (குறள்: 475)

மென்மையான மயில் இறகேயானாலும் வரம்பு மீறிப் பாரம் ஏற்றினால் வண்டியின் அச்சு முறியும் என்று பொருளுரைக்கும் இக்குறளில் வரம்பு மீறுவதால் ஏற்படும் பின்விளைவுகள் உணர்த்தப்பட்டிருக்கின்றன.

இயற்பியலில் மட்டுமன்றி அறிவியலின் பல துறைகளிலும் இக்குறளின் மெய்ப்பொருள் பொருந்தி வருகின்றது. இயற்பியலில் இதற்குப் பல எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். படிப்படியாக அதிகரிக்கும் இழுவிசையுடன் ஓர் இரப்பர் கயிற்றை இழுக்கும்போது ஒரு நிலையில் கயிறு அறுபட்டு விடுகின்றது. இதனை 'மீட்சி எல்லை' (Elastic limit) என்பர். எப்பொருளும் அவற்றிற்குரிய மீட்சி எல்லைக்குட்பட்ட விசைகளுக்கு மட்டுமே மீள்திறன் (Elasticity) உடையதாக இருக்கின்றது. மீட்சி எல்லைக்கு அப்பால் அவை மீள்திறனை இழந்து விடுகின்றன.

மின் தேக்கி (Capacitor) என்பது மின்னூட்டங்களைத் தேக்கி வைத்துக் கொள்ளக்கூடிய மின்னுறுப்பாகும். ஒரு மின்தேக்கியில், அதனால் தேக்கி வைத்துக் கொள்ளக்கூடிய அளவையும் மீறி அதிக அளவு மின்னூட்டத்தை ஊட்டினால் மின்பொறி ஏற்பட்டு, புற ஊடகத்தில் மின் கசிவு ஏற்படுகின்றது. மேகங்களுக்கிடையே மின்னல் விளைவதற்குக்கூட இதுவே காரணம்.

ஒரு துகள், ஒரு குறிப்பிட்ட ஊடகத்தில் ஒரு குறிப்பிட்ட பெரும வேகத்திற்குட்பட்டே இயங்க முடியும். இதற்கும் அப்பாற்பட்டதாக இருப்பின் அது தன் ஆற்றலை சிறங்கோவ்

கதிர் வீச்சுகளாக (Cerenkov radiations) துகளின் இயக்க வேகத்திற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட திசையில் உமிழ்கின்றது. வரம்பு மீறினால், ஒன்றின் இயல்பான இயற்பியல் கூறுகள் மாறிவிடுகின்றன என்பதை இவை சுட்டிக்காட்டுகின்றன. ஒருவன் வரம்புக்கு மீறிச் செல்வத்தைத் தனதாக்கிக் கொள்ள முடியாது என்பதை இயற்கையின் ஒவ்வொரு செயலும் நமக்கு அறிவுறுத்திக் கூறுகின்றது. தேவைக்கு அதிகமாய் ஒருவன் செல்வத்தை ஈட்டும் வாய்ப்பைப் பெறுவானேயானால், இயற்கையின் ஓர் அடிப்படைக் கூறான உயிரில்லாத அணுக்கள் உமிழும் சிறங்கோவ் கதிர் வீச்சுகளைப் போல அவற்றைச் சமுதாயத்திற்காக அவன் உமிழ வேண்டும். இயற்கையைப் பார்த்து இன்னும் தெரிந்துகொள்ளாத இல்லை தெரிந்து இருந்தும், புரிந்துகொள்ள மறுக்கின்ற பாடங்கள் இதுபோல எவ்வளவோ இருக்கின்றன.

பேரண்டத்தை நோக்கினாலும் இப்பேருண்மை புலப்படுகின்றது. விண்வெளியில் எங்கும் சிதறுண்டு கிடக்கும் ஹைட்ரஜன் மற்றும் பிற அணுக்களையும் ஒருங்கே குவித்துத்தான் ஒரு பெரிய ஒளிரும் விண்மீன் காலப்போக்கில் உருவாக்கப்படுகின்றது. ஒரு விண்மீனின் நிறை அது எவ்வளவு அணுக்களை ஈர்த்துக் குவித்திருக்கின்றது என்பதைப் பொருத்தது. அளவுக்கு மீறிய நிறையுடைய பெரிய விண்மீன்கள் ஒளிவிட்டு ஓய்ந்தபின் வெடித்துச் சிதறக்கூடிய வாய்ப்பைப் பெறுகின்றன. பெரு வெடிப்புக் கொள்கை (Big Bang Theory) யின் அடிப்படை கூட இதே கருத்தில் எழுந்ததுதான். தொடக்க காலத்தில் (இதற்கு முந்திய காலத்தை யாராலும் யூகித்து வரையறுக்க முடியாது) பொருள்கள் அனைத்தும் ஒரு மிகப்பெரிய விண்ணுறுப்பாக இருந்தது என்றும் அதில் ஒரு நிலையற்ற தன்மை தூண்டப்பட்டபோது அது வெடித்து அண்டங்களாகவும், அதனுள் அடங்கிய விண்மீன்களாகவும் மாறி இருக்கின்றது என்று இக்கொள்கை தெரிவிக்கின்றது.

இயற்கையின் இனிய சூழல் ஓரளவு மாசுகளை (Pollutants) மட்டுமே தாக்குப்பிடிக்கும். அவற்றின் அளவு வரம்பு மீறினால் பின் விளைவுகள் இனிய சூழலை நச்சூட்டும். நிலக்கரி,

பெட்ரோல் போன்ற தொல்லெச்சங்களைத் தொடர்ந்து பயன்படுத்துவதாலும், கரிமப் பொருட்களை (Organic matters) எரிப்பதினாலும், உலகின் சுற்றுப்புறம் தொடர்ந்து மாசுபட்டு வருகின்றது. இதனால் புவியின் வளிமண்டலத்தில் கார்பன்-டை-ஆக்ஸைடின் அளவு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இப்போக்கினால், சுவாசிக்கும் போது ஒருவருக்குத் தேவையான அளவு ஆக்ஸிஜன் கிடைக்காமற் போகலாம். இது உடல் நலம் சீர்கெட வழி செய்யும்.

சூரிய ஒளியில் வரும் ஆற்றல் மிக்க புற ஊதாக் கதிர்களின் நேரடித் தாக்குதலுக்கு ஆளானால் உயிர்ச் செல்கள் திரிவுற்றுப் பெருவாரியாகச் செத்து மடியும், வளர் சிதை மாற்ற வினைகளில் குறிப்பிடும் படியான பாதிப்பு ஏற்படும். இதனால் பரிணாம வளர்ச்சிப் படியில் தீங்கு விளைவதோடு உயிரினங்கள் தங்கள் உயிரை இழக்கவும் நேரிடலாம். உலகில் உயிரினமே இல்லாத நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்று இயற்கை ஒரு பாதுகாப்புக் குடையை அமைத்திருக்கின்றது. இதனை ஓசோன் படலம் (Ozone layer) என்பர். ஆபத்தான புற ஊதாக் கதிர்களை வடிகட்டும் பணியை இந்த ஓசோன் படலம் செய்கிறது. வளி மண்டலத்தில் சேரும் மாசுகளினால், இந்த ஓசோன் படலம் அரித்தெடுக்கப்பட்டு நாள்தோறும் நலிவடைந்து மெலிந்து வருகின்றது. இதனை ஓசோன்துளை (Ozone hole) என்பர். இப்போக்கைத் தடுத்து நிறுத்த மாசுக்கட்டுப்பாடு வலியுறுத்தப்படுகின்றது.

உயிர்காக்கும் பிராணவாயு எனப்படும் ஆக்ஸிஜன் புவியின் வளி மண்டலத்தில் 20.95 விழுக்காடுதான். வளிமண்டலத்தில் ஒரு பகுதியில் அதன் அளவு வரம்பு மீறினால், வளர்சிதை மாற்றங்களில் நச்சுத்தன்மை கொண்ட விளை பொருள்களை உற்பத்தி செய்து, உயிர்காத்த அதே ஆக்ஸிஜன் உயிருக்கு எமனாகி விடுகின்றது. உயிரியல் தொகுப்பாக்க வழிமுறைகளிலும், உடலுறுப்புகளுக்குத் தேவையான ஆற்றலைத் தேவையான பொழுது பெற்றுத் தரும் வழிமுறைகளிலும் இந்த ஆக்ஸிஜனை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளும் ஆக்க முறைகளில் வளி

மண்டலத்தில் ஆக்ஸிஜன் அளவு அதிகரிக்கும் போது பாதிப்பு ஏற்படுகின்றது.

உணவுப்பொருட்களில் உள்ள கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின் என்ற உயிர்ச் சத்து, தாது உப்புகள் போன்றவைகள் அளவு மீறும்போது, உடல் நலத்தில் குறிப்பிடும் படியான பாதிப்பு ஏற்படுவதையும், இக்குறளுக்கு அறிவியல் விளக்கமாகக் கூறலாம். அறிவியல் உலகில் எதன் அளவு மிகுந்தாலும், அச்சாணி முறிந்து வண்டி நிலை குலைந்து போவதைப் போல பின் விளைவுகள் ஏற்படும் என்று கூறி அன்றைக்கே இதைக் குறிப்புணர்த்தியுள்ளார் என்றால், வள்ளுவர் ஓர் அறிவியல் அறிஞராகவும் விளங்கியிருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை.

இதுதான் எங்கள் ஊர். இப்போது உள்ள உத்தமதான புரத்துக்கும் 'எங்கள் ஊர்' என்று பெருமையோடு நான் எண்ணும் உத்தமதானபுரத்துக்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. என் இளமைக்காலத்தில் இருந்த எங்கள் ஊர்தான் என் மனத்தில் இடங்கொண்டிருக்கிறது. இந்தக் காலத்தில் உள்ள பல சௌகரியமான அமைப்புகள் அந்தக் காலத்தில் இல்லை; ரோடுகள் இல்லை; கடைகள் இல்லை; உத்தியோகஸ்தர்கள் இல்லை; ரெயிலின் சப்தம் இல்லை ஆனாலும் அழகு இருந்தது; அமைதி இருந்தது; பக்தி இருந்தது. அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது; வீடுகளில் லக்ஷ்மீகரம் விளங்கியது.

இவ்வளவு ரூபா யென்று கணக்கிட்டுச் சொல்லும் ஆஸ்தி அந்தக் காலத்து உத்தமனதானபுர வாசிகளிடம் இல்லை; ஆயினும் நீரும் நிழலும் தானியங்களும் இருந்தன. அவர்களுடைய வாழ்க்கையில் வேகம் காணவில்லை. அதனால் ஒரு குறைவும் வந்துவிடவில்லை. அவர்களுடைய உள்ளத்தில் சாந்தி இருந்தது.

உ.வே.சா. என்சரித்திரம்

# திருமந்திரப் பாட வேறுபாடும் உரைகாரர் இடர்ப்பாடும்

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

தமிழிலக்கிய நூல்களுள் பாடவேறுபாடு மிகுதியாக உடையவற்றுள் திருமூலர் திருமந்திரமும் ஒன்று. இந்நூலின் முதல் 400 பாடல்கள், பத்து ஏட்டுச் சுவடிகளைக் கொண்டும், பதிப்புகள் சிலவற்றைக் கொண்டும் ஒப்பு நோக்கப்பட்டன. இப்பதிப்புகளுள் சில உரையுடன் கூடியவை அவற்றிற் கூறப்பட்ட உரையையும் ஒத்திட்டுப் படித்தபொழுது, பாட வேறுபாட்டால் உரைகாரர் இடர்ப்பட்டு உரை வகுப்பது கண்டறியப்பட்டது.

திருமந்திரப் பாடவேறுபாடுகளின் தன்மையை அறிந்துகொள்ள உதவியாக அவற்றை வகைப்படுத்தியும், உரை வகுத்தோர் மூலபாட ஆய்வு மேற்கொள்ளாமல், ஓரிரு பதிப்புகளிற் கண்ட பாடத்தை மேற்கொண்டமையால் உரை வகுத்தற்கண் உறும் இடர்ப்பாடுகளைச் சுட்டியும், அவர் இடர்ப்பட்ட விடங்களில் வரத்தக்க செவ்விய பாடங்கள் கட்டுரையாளர்க்குக் கிடைத்தமையின் அவற்றின் பொருத்தத்தை ஆய்ந்து எடுத்துக் காட்டியும் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

கட்டுரையாளர் தொகுத்த சுவடிகள்:

| | |
|---|---|
| திருவாவடுதுறை யாதீனத்துச் சுவடிகள் | - 4 |
| தருமபுர வாதீனத்துச் சுவடி | - 1 |
| சென்னைத் திருவான்மியூர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகச் சுவடி | - 1 |
| மேற்படிகையெழுத்துத் தாள்கள் சுவடி | - 1 |
| சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் காப்பகத்துச்சுவடி | - 1 |
| உறையூர்ப் பெரிய மடத்துச் சுவடி | - 1 |
| புதுச்சேரிப் பிரெஞ்சிந்தியக்கழகச் சுவடிகள் | - 2 |

கட்டுரையாளர் ஒப்புநோக்கிய பதிப்புகள்:

திருமூலர் திருமந்திரம் ச.தண்டபாணி தேசிகர் உரை திருவாவடுதுறை ஆதீனப்பதிப்பு 1987, 1989

திருமந்திரம் சி.அருணை வடிவேல் முதலியார் உரை தருமை யாதீனம் பதிப்பு 1994.

## பாட வேறுபாடுகளின் வகைப்பாடு:

பொதுவாகத் தமிழ் நூல்களில் உள்ள பாட வேறுபாடுகள் (1) எழுத்து வேறுபாடு (2) சொல் வேறுபாடு (3) பொருள் வேறுபாடு (4) இலக்கண வேறுபாடு என்னும் நால்வகையின என்பர் பழனியப்பன்! இவ்வகையுள் சிற்சில உட்பிரிவுகளையும் அவர் வகுத்துள்ளார். அவ்வகைப்பாட்டின்படி, திருமந்திரப் பாட வொப்புநோக்கிற் கண்ட பாடவேறுபாடுகள் இங்கு வகைக்குச் சிலவாகக் காட்டப்படுகின்றன.

### I எழுத்து வேறுபாடு

அ) எழுத்துச் சேர்க்கை:

அருவரை யாய்நின் றருள்புரிந் தானே (திருமந்.362)
அருள்வரை யாய்நின் றருள்புரிந்தானே (வேறுபாடம்)
இவ்வெழுத்துச் சேர்க்கை பொருள்வேறுபாடு செய்கின்றது.

ஆ) எழுத்து விடுபடல்:

1. வீயத்தை முற்றும் விளங்கியிட் டேனே (திரும.பாயிரம்:90)
<u>வே.பா.:</u>
வீயத்தை முற்றும் விளங்கிட் டேனே
2. ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரம் (திரும.பாயிரம்:85)
<u>வே.பா.</u>
ஊன்பற்றி நின்ற உணருறு மந்திரம் (வே.பா)

இ. எழுத்து மாற்றம்

1. பின்னாற் பிறங்க விருந்தவன் (திரும.பாயிரம்:9)
<u>வே.பா.</u>
மின்னாற் பிறங்க விருந்தவன்
2. நிதிபதி செய்த நிறைதவ நோக்கி (திரும.பாயிரம்:18)
<u>வே.பா.</u>
நெதிபதி செய்த நிறைதவ நோக்கி

### II சொல் வேறுபாடு

(பொருள் வேறுபாடு செய்யாத சொல் வேறுபாடு)

---

இக்கட்டுரையில் காட்டப்பெறும் திருமந்திரப் பாடலெண்கள், திருமூலர் திருமந்திரம் - தண்டபாணி தேசிகர் உரை, - திருவாவடுதுறையாதீனப் பதிப்பில் உள்ளவை.

அ. ஆ. சொற் சேர்க்கை; சொல் விடுபடல்!!
பொன்னாற் புரிந்திட் டதுபொற் சடைமுடி (பாயிரம்: 9)
<u>வே.பா.</u>
பொன்னாற் புரிந்திட் டதுபொற் புரிசடை
இ) பழஞ்சொல் இக்காலச் சொல்லாதல்
இல்லென வேண்டா விறையவர் தம்முதல் (பாயிரம்:23)
<u>வே.பா.</u>
இல்லென வேண்டா மிறையவர் தம்முதல்

III பொருள் வேறுபாடு

அ) ஒரு பொருள் - வேறு சொல்
எங்கும் வளங்கொ ளிலங்கொளி தானே (திரும. 338)
<u>வே.பா.</u>
எங்கும் வளங்கொள் விளங்கொளி தானே
ஆ) வேறு சொல் - வேறு பொருள்:
1. அகலிடத் தேயிரு ணீங்கிநின் றேனே (பாயிரம்:4)
<u>வே.பா.</u>
இகலிடத் தேயிரு ணீங்கிநின் றேனே
2. அல்லியு ளாதித்த காயமு மாமே (திரும.293)
<u>வே.பா.</u>
வல்லியுள் வாதித்த காயமு மாமே

IV இலக்கண வேறுபாடு

அ) சுட்டெழுத்து மாற்றம்:
அவனொடொப் பாரிங்கி யாவரு மில்லை (பாயிரம்:5)
<u>வே.பா.</u>
இவனொடொப் பாரிங்கி யாவரு மில்லை.
ஆ.ஒருமை - பன்மை மாற்றம்:
புகலிடத் தென்மெய்யைப் போதவிட் டானை (பாயிரம் : 4)
<u>வே.பா.</u>
புகலிடத் தெம்மெய்யைப் போதவிட் டானை
இ.வேற்றுமை யுருபு விகுதியாதல்:
கண்ணுத லானொரு காதலி னிற்கவும் (பாயிரம் :12)
<u>வே.பா.</u>
கண்ணுத லானொரு காதல னிற்கவும்
ஈ) விகுதிச் சேர்க்கை:

அதுபதி யாதரி யாக்கம தாகி (பாயிரம் : 18)
<u>வே.பா.</u>
அதுபதி யாதரித் தாக்கம தாகி
உ) விகுதி மாற்றம்:
எல்லியுங் காலையு மேத்த விறைவனை (திரும. 293)
<u>வே.பா.</u>
எல்லியுங் காலையு மேத்து மிறைவனை
ஊ) பெயரெச்சம் வினையெச்சமாதல்:
பொருந்திய லிங்க வெளியது போக்கி (திரும. 346)
*வே.பா.*
பொருந்தி யிலிங்க வெளியது போக்கி
எ) வேற்றுமை யுருபு மாற்றம்:
பரத்திலே யொன்றாய் (பாயி.111)
<u>வே.பா.</u>
பரத்தினோ டொன்றாய்
ஏ) இட மாற்றம்:
*நினைத்த தறிவனே நீசர் நினையார்* (பாயி. 22)
<u>வே.பா.</u>
நினைத்த தறிவனே நீதா னினையாய்

## பாடவேறுபாடு; உரைகாரர் இடர்ப்பாடு; செவ்விய பாடத் தேர்வு:

திருமந்திரப் பாடல்களுள் சிலவற்றில் காணப்படும் பாட வேறுபாட்டால், உரைகாரர் ஆகிய தண்டபாணி தேசிகரும் அருணை வடிவேல் முதலியாரும் இடர்ப்பட்டு உரைவகுத்த மைக்குச் சில சான்றுகள் காட்டப்படும். அவர்கள் சுவடிகளை ஒப்பு நோக்காமல், ஓரிரு பதிப்புகளை மட்டும் கண்டு பாடங் கொண்டதாக அறியப்படுகின்றது. அவர்கள் தம் பதிப்புரைகளில் சுவடியாய்வு செய்ததாகக் குறிப்பிடப்படவில்லை. ஆயின், அருணை வடிவேல் முதலியார் பதிப்புகளிலும் சுவடிகளிலும் காணப்படாத பாடங்களைக் கொண்டுள்ளார். அவை அவர்தம் கருத்திற்கு ஒத்தவாறு திருத்திக்கொண்டனவாக வேண்டும். ஆனால் அடிக்குறிப்பில் தாம் திருத்தியதாக ஓரிடத்திலும் அவர் குறிப்பிடவில்லை. அவ்வுரையாசிரியர் இருவரும் சுவடிகளை ஒப்புநோக்கியிருப்பின், செவ்விய பாடங்களைத் தேர்ந்து

கொண்டிருப்பர். மற்றொரு குழப்பமும் திருவாவடுதுறை யாதீனத்து உரையுடன் கூடிய பதிப்பில் காணப்படுகிறது. தண்டபாணி தேசிகர் எழுதியுள்ள உரைக்குக் கொண்ட பாடம் வேறாகவும், பதிப்பில் தந்துள்ள மூல பாடம் வேறாகவும் உள்ளன. அவர் உரையெழுதி வெளிவந்த முதற்பதிப்புக் கட்டுரையாளர்க்குக் கிடைக்கவில்லை. 1987, 89 ஆம் ஆண்டுகளில் வந்த மறு மதிப்பு இவ்வாறு உள்ளது.

மேற் குறிப்பிட்டவாறு உரைகாரர் இடர்ப்பட்டு உரை கூறும் பாடல்களுக்குரிய செவ்விய பாடங்கள் எவை என இங்கு ஆய்ந்து விளக்கப்படும். கட்டுரையில் இடச் சுருக்கம் கருதி, 5 சான்றுகள் மட்டுமே காட்டப்படும்.

1. திருமூலர் இறைவன்பால் தாம் கொண்ட அன்பின் ஆற்றாமையை,

வானின் றழைக்கு மழைபோ லிறைவனுந்
தானின் றழைக்குங்கொ லென்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோலெ னந்தியை
நானின் றழைப்பது ஞாலங் கரியே.

என்னும் பாடலிற் புலப்படுத்துகின்றார்.

இது கட்டுரையாளர் தேர்ந்து கொண்ட பாடம். பாடத் தேர்வுக்கு மூலபாட ஆய்வியல் முறைகள் கைக்கொள்ளப் பட்டன. இப்பாடல் 4ஆம் அடிக்கு இரு உரைகாரரும், "நானின் றழைப்பது ஞானங்கருதியே" எனப் பாடங்கொண்டனர். 'நானழைப்பது ஞானங் கருதியே எனின் ஏனையோர் அழைப்பது யாது கருதி' எனப் பாடலில் ஒன்றும் கூறப்படவில்லை.

ஆயின், அருணை வடிவேல் முதலியார், "அவனைப் பலர் துதித்து அவற்றிற்கு ஈடாகப் பல பயன்களைப் பெற்றனர்." என இசையெச்சமாக வருவித்து எழுதுகின்றார்.

தண்டபாணி தேசிகர், "இறைவனும் அருள்மழை பொழிதற்கு அழைப்பர். ஆனால் வான்போல அன்று பின் எங்ஙனமெனின் ஆன்போல........

நாமும் கன்றுபோல அழைக்கவேண்டும். ஆனால் கன்று அழைப்பது பால் கருதி. நான் அழைப்பது ஞானங்கருதி" என்று எழுதுகிறார்.

ஞானங்கருதி அழைப்பது, தேசிகர் கூறும் உவமையால் முடிவது ஆதலின், அவர் பிரிநிலை ஏகாரத்தால் கன்றினின்றும் நம்மைப் பிரித்துக்காட்டியது வேண்டா கூறலாம். எனவே இப்பிரிநிலை ஏகாரத்திற்கு அவர் தக்க உரை காட்டவில்லை என்பது தெளிவு.

ஆனின்றழைக்குமதுபோல் என் நந்தியை நான் அழைப்பது எனப்பாடலில் உவமை நேராகவே உள்ளது. இறைவன் அம்மையப்பனாதலின் அவர் பசுப்போல்வன் எனின், மணிவாசகர், "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" எனக் கூறியது பொருத்தமின்றாகும்.

ஆகவே "ஞானங்கருதியே" என இவ்விரு உரைகாரரும் கொண்டபாடம் பொருந்தாது.

ஞாலமே சாட்சியாக இருப்ப, அடியவர் அன்பின் ஆற்றாமையை வெளிப்படுத்தியமைக்கு அருளாளர் வாழ்வில் சான்று உள்ளது. அவர்தம் வாக்கிலும் இதே ஆட்சி உள்ளது. மாணிக்கவாசகர் 'கற்றா மனமெனக் கதறியும் பதறியும்,' ஊரவர் பேய் என்று பழித்துரைக்க, 'நாடவர் பழித்துரை பூணதுவாகக்' கொண்டு ஆற்றா அன்பின் வயப்பட்டுத் தாம் திரிந்தமையைத் திருவாசகத்தில் கூறி, "ஞாலமே கரியாக நான் உனை நச்சி"[3] என்றும் கூறுவார். ஊரவர் பழித்தமையின், இருவரும் தம் அன்புக்கு உலகமே சாட்சி என்கின்றனர்.

திருமூலர் மற்றொரு நயமும் இணைக்கின்றார். இடியிடித்தால் அனைவருக்கும் தெரியும். அதைப்போல இறைவன் வானில் நின்று 'வா'என்று முழங்கினால் அதற்கு உலகமே சாட்சி சொல்லும். ஆனால் உலகமே சாட்சியாக இறைவன் நம்மை அழைக்கமாட்டான். நான் அன்பினால் அவனை அழைப்பதற்கு உலகமே சாட்சி என்று நயந்தோன்றக் கூறுகின்றார்.

2. திருமூலர் 'அறத்தால் விளையும் நன்மைகளைக் கொண்டு, அதன் பெருமையை அளவிட்டறிய வேண்டும்; அவ்வாறு அறியாதோர் மூவகையினர்' என்று,

"துறந்தான் வழிமுதல் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுத லின்பமும் இல்லை

3 திருவாசகம் திருக்கழுகுன்றப்பதிகம்.

மறந்தான் வழிமுதல் வந்தில னீசன்
அறந்தா னறியு மளவறி யாரே" என்ற பாடலில் கூறுகின்றார்.

இது கட்டுரையாளர் கொண்ட பாடம். உரைகாரர் இருவரும் இப்பாடல் இறுதியடிக்கு "அறந்தானறியுமளவறி வாரே" எனப் பாடங்கொண்டனர். இல்லறத்தை மேற்கொண்டு நன்கனம் ஆற்றியவனுக்குச் சுற்றத்தாரின் துணை உண்டு. அறம் வழுவாமல் ஒழுகியவனுக்கு இன்பம் உண்டு. அறத்தை மறவாதவன் இறைவனின் அருளைப் பெறுவான். மாறாக, துறவிக்குச் சுற்றம் இல்லை. அறநெறி தவறியவன் துன்பம் அடைவான். அறத்தை மறந்தவன் இறையருள் பெறான். இம் மூவரும் அறத்தின் நன்மைகளைக் கொண்டு, அதன் பெருமையை அளவிட்டு அறியாதோர் ஆவார். என நேரே உரைகாண 'அளவறியாரே' என்ற பாடம் உதவுகின்றது.

ஆனால், 'அளவறிவாரே' என்று பாடங்கொண்ட உரைகாரர் அப்படர்க்கைத் தொடர்க்கு முன்னிலைப் பொருள் காண நேர்ந்தது! அம்மட்டோ? 'அறியும்' என்பதை உம் ஈற்று முன்னிலைப் பன்மை ஏவலாகக் கொள்ளவும் நேர்ந்தது. இவ்வீறு இப்பொருளில் திருமூலர் காலத்தில் வழக்குடையது அன்று. தாம் கொண்ட பாடம் முன்னடிப் பொருள்களோடு பொருந்தாமை கண்டு உரைகாரர் இவ்வடிக்கு இடர்ப்பட்டு உரைகண்டனர்.

3. ஆட்சிபுரியும் அரசனும் தன் செல்வத்தைப் பிறர் கொள்ளும்முன்னே இறைவனை வணங்க வேண்டும் என்பதைத் திருமூலர்,

"அருளும் அரசனு மானையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரி
லருளும் பினையவன் மாதவ நன்றே"

என்ற பாடலிற் கூறுகின்றார். இதன் இறுதியடிக்கு, "மருளும் பினையவன் மாதவ மன்றே" எனப் பாடங்கொண்டு, தண்டபாணி தேசிகர், 'பிறகு அவன் சார்தற்குரிய மருட்சியைத் தரும் மாதவங்கள் ஒன்றுமில்லை' என்று உரை கூறுகின்றார். அட்டாங்க யோகமாகிய தவத்தைப் பெரிதும் வலியுறுத்தி, நூலிற் பெரும் பகுதியிற் கூறிய ஆசிரியர் இங்கு 'மாதவம் ஒன்றும் இல்லை' எனக் கூறினார் எனல், தம்முடனே முரணுவதாம். எனவே

அங்ஙனம் செய்யுள் செய்யார் என்க.

"மலர் மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் "என்புழிப் போல, இங்குச் 'சேரின்' என்பதற்கு நினைத்தால் எனப் பொருள் கொண்டு, செல்வனை நினைத்தால் அருள்வான், பிறகு ஒருவன் (அரசன்) செய்யும் மாதவம் நற்பயன் தரும் எனல் பொருந்தும் மற்றும் பெருமை நோக்கி மா-தவம் என அடைமொழி புணர்த்த ஆசிரியர், அதனைத் தாமே மறுத்து 'மருளும் மாதவம்' எனக் கூறாரென்க.

4. நூலறிவாகிய பாச ஞானத்தினும், பதிஞானம் பெறுதலே சிறந்தது என்பதையும் அன்பு அற்ற யோகம் அருளியற் பயன் தராது என்பதையும் திருமூலர்,

"கல்வியுடையார் கலந்தோடிப் போகின்றார்
பல்லியுடையாரப் பாம்பரிந் துண்கின்றார்
எல்லியுங் காலையு மேத்த விறைவனை
யல்லியு ளாதித்த காயமு மாமே"

என்ற பாடலிற் கூறுகின்றார். இது கட்டுரையாளர் கொண்ட பாடம். இதன் இறுதியடிக்கு, "வல்லியுள் வாதித்த காயமு மாமே" எனப் பாடங்கொண்டு தண்டபாணி தேசிகர், "திருவருட் சத்தியால் மாற்றப்பட்ட அழியா உடலாம்" என்று உரை வரைகின்றார். ஏழன் உருபாகிய 'உள்'ளுக்கு மூன்றன் கருத்தாப் பொருள் கொள்வது எங்ஙனம்? அன்றியும் 'வாதித்த' என்ற சொல்லுக்கு மாற்றிய என்ற பொருள் இல்லை. இரசவாதி எனப் பொருள் தரும் வாதி என்ற பெயரினின்றும் இவ்வினைச் சொல்லை உருவாக்கிப் பொருள் கூறுவதாகத் தோன்றுகின்றது. அதற்கு வேதித்தல் என்ற சொல் இருத்தலின் ஆசிரியர் வாதித்தல் என்ற சொல்லைப் பயன்படுத்தியிரார்.

இவ்வடிக்கு இப்பாடமே கொண்ட அருணை வடிவேல் முதலியார் "சத்தி உள் நின்று தாங்குவதாகிய அருள் உடம்பும் ஆம்" என்று உரை கூறுகின்றது. "வாதித்தலுக்குத்" "தாங்குதற் பொருளும்" இல்லை.

அல்லியுள் ஆதித்த காயமும் ஆமே, என்னும் பாடத்திற்குத் தாமரை மலரில் சூரியனின் ஒளி படிந்தாற்போல ஆகும் என்பது பொருள். மொட்டாக இருந்தது சூரிய ஒளி பட்டவுடன் மலர்வதுபோல், அருட்சத்தி பதிந்தவுடன் உடல் அருளுடம்பாக

மலர்ச்சி பெறும். "கூற்றையும் வெல்லும் குறிப்பதுவாகுமே" என்று ஆசிரியர் பிற இடத்தில் கூறுதலின், அவர் உடம்பு மாற்றம் பெற்று அழியாதிருக்கும் நிலையைக் கருதுகிறார் என்று எண்ணலாம். "உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்" என்று அவர் கூறுவதால், இறைவனின் அருட்சத்தியால் உடம்பு மலர்ச்சியடையும் என்று இங்கும் பொருள்கொள்வது பொருத்தமாகலாம்.

5. சுழுமுனையாகிய நடுநாடியில் மூச்சைச் செலுத்திச் சாதகம் செய்த யோகிகள் இறவாமை எய்துகின்றனர் என்பதைத் திருமூலர்,

"தோன்றிய வெல்லாந் துடைப்பன நின்றிவர்
ஏன்றுநின் றாரென்று மீச னிணையடி
மூன்றுநின் றார்முதல் வன்றிரு நாமத்தை
நான்றுநின் றார்நடு வாகிநின் றாரே"

என்ற பாடலிற் கூறுகின்றார். இது கட்டுரையாளர் கொண்ட பாடம். இதன் முதலடிக்கு, "தோன்றிய வெல்லாந் துடைப்ப னவனன்றி" என்று பாடங்கொண்டு, தண்டபாணி தேசிகர், அன்றி என்ற வினையெச்சத்திற்குப் பாடல் முடிவு காணாது, "பிறர் இலர்," என இசையெச்சம் வருவித்து முடிக்கின்றார்.

அருணை வடிவேல் முதலியார், 'துடைப்பன் அவன் என நிறுத்தி, அன்றி என்பது மற்று என்ற பொருளில் வந்ததாகக் கூறுகின்றார். அவர் பாடற் பொருளாகக் கூறும் சர்வ சங்காரம், முதற் கடவுள் யார் என்பது ஆகியவை இப்பாடல் உள்ள அதிகாரத்தில் கருதப்படும் பொருள்களல்ல. ஆதலின் அவர் கொண்டு கூட்டிக் கூறும் உரை பொருந்தாது. இவ்வதிகாரத்து முன்னைப் பாடல்களில் 'நடுவு நின்றவர் தேவரும் ஆவர்' என அழியாமை எய்துதல் கூறப்படுதலின், 'உலகில் தோன்றிய எல்லாம் துடைக்கப்படுவனவே, ஆயினும் நடுநின்றாராகிய இவர் நிலைத்து நின்று இறைவனடியை உள்ளத்தில் ஏந்தி நின்றார் என்று கொள்வது பொருத்தமாகும்.'

ஆகவே உரைகாரர் இசையெச்சமாகவும் கொண்டு கூட்டியும் இடர்ப்பட்டு உரை வகுத்துள்ளமை பெரிதும் பயன் தராது ஒழிந்தது.

# மொழி ஆய்வு

*முனைவர் கி. அரங்கன்*

## அறிமுகம்

மொழியைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் வரலாற்றுக் காலம் தொட்டுத் தொடர்வதை நாம் காண்கிறோம். நம்முடைய பழைய இலக்கணங்கள் இதைப் பறைசாற்றுகின்றன. மொழியைப் புரிந்துகொள்ள வேண்டிய தேவை பல்வேறு சமூகக் காரணங்களால் எழுகிறது. முதல் நிலையில், பயன்பாட்டுத் தேவை முக்கியப் பங்கு வகிக்கிறது. சான்றாக, நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட இலக்கியங்களை உடைய மொழி அதன் அமைப்பில் பல்வேறு மாற்றங்களை உட்கொண்டிருக்கும். ஆகையால் பல்வேறு கட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டால் ஒழிய அதனுடைய இலக்கியங்களைப் புரிந்துகொள்வதும் அவற்றைச் சுவைப்பதும் கடினமான காரியமாக அமைந்துவிடுகிறது. இலக்கியப் புரிதலும் சுவைப்பும் மொழி அமைப்பை விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற முயற்சியின் பின்புலமாக உள்ளன. ஆகையால் இலக்கணங்கள் இத்தகைய சமூகப் பின்னணியில் உருவெடுக்கின்றன.

ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தோடு தொடர்புகொள்ளும் போது பல்வேறு மாற்றங்களுக்கு ஆளாகவேண்டி வருகிறது. முதலில் இரு சமூகங்களும் தொடர்பு கொள்வதில் மொழி முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு சமூகமோ இரு சமூகங்களோ இரு மொழிகளையும் அறிந்துகொள்ள வேண்டிய சமூக நிர்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றது. ஒரு சமூகத்தின் தாக்கம் மொழிவழியாக இன்னொரு சமூகத்தில் ஊடுருவுகிறது. மொழி, சமூக/ பண்பாட்டுத் தளம், மதம் ஆகியவற்றில் இன்னொரு சமூகத்தின் பாதிப்பு உண்டாகிறது. இத்தகைய சூழல்களில் சமூகத் தேவைகள் மாறுபடுகின்றன. இச்சமூகத் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் இலக்கணங்கள் தங்கள் அமைப்பையும் பயன்பாட்டையும் மாற்றிக் கொள்கின்றன. இப்பின்னணியில் பார்க்கும்போது மொழிக்கும் சமூகத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை நாம் உணரலாம். நாம்

மொழியைப் பல்வேறு கோணங்களில் நோக்கலாம். மொழியைச் சமூகத்தின் விளைபொருளாகவும் (Product of Society) மனித மனதின் விளைபொருளாகவும் (Product of Human Mind) வரலாற்றின் விளைபொருளாகவும் (Product of History) உடலியலின் விளைபொருளாகவும் (Product of Biology) நோக்கலாம். இதில் எது சரியான அணுகுமுறை என்ற சர்ச்சை நம்முடைய நேரத்தை வீணடிப்பதற்கு இட்டுச் செல்லும். ஒவ்வொரு அணுகுமுறையும் மொழியின் இயல்பையும் அமைப்பையும் வெளிப்படுத்த எவ்வாறு உதவுகிறது என்பதைக் காண்பது நமக்கு நன்மை பயக்கும். இதே போல மொழிக்கும் மற்ற துறைகளுக்கும் உள்ள உறவையும் தொடர்பையும் புரிந்துகொள்ள இவ்வணுகுமுறை மிக உதவியாக இருக்கும்.

மொழிக்கும் சமூகத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்துகிற மொழியியலின் பகுதி சமூக மொழியியல் (Sociolinguistics) என்று அழைக்கப்படுகிறது. சமூகத்தின் அமைப்பையும் அதன் இயக்கத்தின் போக்கையும் அறிந்துகொள்ள மொழி ஆய்வு எந்த அளவிற்குப் பயன்படும் என்பது ஒரு கேள்வி. சமூகத்தின் அமைப்பில் ஏற்படும் மாற்றம் மொழியிலும் பிரதிபலிக்கும் என்பது ஒரு அடிப்படையான கருதுகோள் (Hypothesis) இந்தப் பின்னணியில் பல்வேறு ஆய்வுகள் மொழியியலிலும் சமூகவியலிலும் நடைபெற்றுள்ளன. இவற்றுள் பேரா. சிவத்தம்பி அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளை பரிசீலிப்பதே இக்கட்டுரையின் மையமாக அமைகியது.

### பின்னணி

அவருடைய "*இலக்கணமும் சமூக உறவுகளும்*" என்ற நூல் குறிப்பிடப்பட வேண்டியது. தமிழ் மரபில் வெளிவந்த முக்கிய இலக்கண நூல்களாக தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு நூல்களையும் ஆய்வில் மையப்படுத்திக்கொள்கிறார். பேரா.சிவத்தம்பி அவர்கள் மார்க்சீயக் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர் என்பது தமிழாய்வு உலகம் நன்கு அறிந்ததே. இதனுடைய பின்னணியில் இவ்விரு இலக்கணங்களையும் ஆராய்கிறார். வரலாற்றுப் பொருள் முதல் வாதம் என்னும்

மார்க்சீயத் தத்துவக் கோட்பாடு இவ்வாய்வின் முதுகெலும்பாக அமைந்துள்ளது. இந்நூலின் குறிக்கோளாக சிவத்தம்பி அவர்கள், "தமிழ்ச் சொல்லிலக்கண அமைப்பும், அவ்வமைப்பின் வரலாறும் சுட்டி நிற்கும் சமூக, உற்பத்தி உறவுகளையும் அவற்றின் கால நிலைப்பட்ட மாற்றங்களையும் எடுத்துக்கூற முயல்வதே... நோக்கமாகும்" (பக்.1) என்று குறிப்பிடுகிறார். இத்தகைய முயற்சிக்கு வரலாற்று இலக்கணம் அத்தியாவசியமானதாகும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். சமூக அமைப்பை இலக்கணங்களில் உள்ள திணை, பால், எண், வேற்றுமை, வினையமைப்பு ஆகியவற்றின் வகைப்பாட்டின் மூலம் புரிந்துகொள்ளும் முயற்சி இது.

மார்க்சீயக் கோட்பாட்டில் பொருளாதார அமைப்பு அடிநிலை அமைப்பாகவும் (Base structure) மற்ற சமூக நிறுவனங்களான அரசியல், சட்டம், இலக்கியம், மதம் ஆகியவை மேல்நிலை அமைப்பாகவும் (Superficial Structure) கருதப்படுகின்றன. சமூக மதிப்பீடுகள், சமூகத்தின் மனப்பாங்கு முதலானவையும் மேல்நிலை அமைப்பைச் சார்ந்தவை.

பொருளாதார அமைப்பின் மாற்றம் மற்ற சமூக நிறுவனங்களையும் சமூக மதிப்பீடுகளையும் பாதிக்கிறது. இவ்விரு அமைப்புகளில் மொழி எங்கு அடக்கப்படுகிறது என்பது சர்ச்சைக்குரியதாக இருக்கிறது. மொழியின் தன்மை மற்ற சமூக நிறுவனங்களின் தன்மையிலிருந்து வேறுபடுகிறது. மொழி மற்ற சமூக நிறுவனங்களைப்போல மேல்நிலை அமைப்பைச் சார்ந்தது என்பது சர்ச்சைக்குரியதாக ஆக்கப்பட்டுவிட்டது. அது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திய அடிநிலை அமைப்போடோ மேல்நிலை அமைப்போடோ சம்பந்தப்படுத்தப்பட்டதல்ல. அது அந்தச் சமூகத்தின் முழுமைக்கும் சம்பந்தமானது. சமூகத்தின் வரலாற்று முழுமையிலும் ஊடுருவி ஒன்றி நிற்பது. இலக்கியம் போன்று மொழியும் மேல்நிலை அமைப்போடு தொடர்பு உடையது என்பதை ஏற்றுச் சில மார்க்சீயவாதிகள் தங்கள் வாதங்களை முன்வைத்துள்ளனர். ஆனால் ஸ்டாலின் (Stalin 1976) இக்கருத்தை ஏற்காமல் மொழி மேல்நிலை அமைப்போடு மட்டும் தொடர்பு உடையதல்ல என்று வாதாடினார். இது ஒரு சலசலப்பை

மார்க்சீய வாதிகளிடையே ஏற்படுத்தியது. மொழி ஒரு வகுப்பினால் (Class) உருவாக்கப்பட்டதும் அல்ல. அது பல தலைமுறையினரால் சமூகத்தின் வரலாற்றோடு இணைக்கப்பட்டு வளர்க்கப்பட்டது. மொழி அது பேசப்படும் எல்லா வகுப்பினருக்கும் சொந்தமானது.

ஸ்டாலின் அவர்களின் நூலிலிருந்து சிவத்தம்பி அவர்கள் மேற்கோள் காட்டி விளக்குகிறார். ஸ்டாலின் கூற்றுப்படி "மனித நடவடிக்கையின் சகல அம்சங்களையும் தழுவி நிற்கும் மொழியானது மேற்கட்டுமானத்தாற் கட்டப்பெறும் நடவடிக்கைகளிலும் பார்க்க விசாலமானது" என்று சிவத்தம்பி (1999:9) அவர்கள் விளக்குகிறார். மொழியின் இடம் அடிநிலை மேல்நிலை அமைப்பு என்பவற்றைத் தாண்டி சமூகத்தின் பொதுவானதாகவும் வரலாறு முழுமையும் ஊடுருவுவதாகவும் உள்ளது.

## மொழியின் தோற்றம்

இதிலிருந்து மொழியின் தோற்றம் (Origin of Language) பற்றிய ஆய்வுக்கு அவர் நம்மை அழைத்துச் செல்கிறார். மொழியின் தோற்றம் பற்றிப் பேசும்போது சிவத்தம்பி அவர்கள் மொழியை மனிதரின் கூட்டுத் தொழிலினடியாக (Collective Labour) பிறந்ததாகக் கொள்ளும் கருத்தை மிக முக்கியமானதாகக் கருதுகிறார். ஆனால் தற்பொழுது மொழியியலில் மொழியின் தோற்றம் பற்றிய ஆய்வுகளை அதிகமாக ஊக்குவிப்பதில்லை. இன்றைய நிலையில் இவ்வாய்வுகள் அதிகமாக அறிவியல் அணுகு முறைகளுக்கு உட்பட்டு நடத்தப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. சோதனைகளுக்கு உள்ளாகக் கூடிய அடிப்படையான தரவுகள் உள்ளனவா என்பது நம்முன் எழுந்துள்ள கேள்வி. வரலாற்றுக்கு முந்தைய காலத்திற்கு இவ்வாய்வுகள் நம்மை அழைத்துச் செல்வதால் ஊகங்கள் அதிகமாகிவிட வாய்ப்பு உண்டு. ஊகங்கள் கருதுகோள்களாக மாற நமக்குத் தேவையான தரவுகள் உள்ளனவா என்பது நம்முன் உள்ள கேள்வி.

மொழியின் தோற்றத்திற்குச் சில ஆய்வாளர்கள் குழந்தையின் மொழி வளர்ச்சி ஆய்வில் தடயங்கள் சில கிடைக்கும் என்று

நம்புகிறார்கள். அதன் அடிப்படையில் சிவத்தம்பி அவர்கள் (1999:10) உடல்சார் நடவடிக்கைகளில் (Physical activities) அதிகம் ஈடுபடும் குழந்தைகளின் மொழி வளர்ச்சிச் சாத்தியப்பாடு அதிகம் என்பது நிறுவப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகிறார். இங்கு மொழி வளர்ச்சிக்கும் உடல்சார் நடவடிக்கைக்கும் ஒரு தொடர்பு இருப்பதாகச் சுட்டப்படுகிறது. உடல்சார் நடவடிக்கை உழைப்போடு சம்பந்தப்படுத்தப்படுகிறது. மொழியின் ஆற்றலையும் வளர்ச்சியையும் உற்பத்தி உறவுகளின் தேவைகள் நிர்ணயம் செய்கின்றன.

## மொழி ஈட்டம்

குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சி என்பது அடிப்படையானது. பிறப்பிலேயே எவ்வித உடல்குறைபாடும் மனக்குறைபாடும் இல்லாத குழந்தைகளிடம் மொழி ஈட்டம் (Language Acquisition) இயல்பாகவே நடைபெறுகிறது. உடல் வளர்ச்சியும் மனவளர்ச்சியின் கூறான மொழி வளர்ச்சியும் இணைந்து வெளிப்படுகின்றன. 18 மாதக்குழந்தை சொற்களைத் தனித்தனியாக உச்சரிக்கத் தொடங்கி, சொற்களை இணைக்கக் கற்றுத் தனக்குள் ஒரு இலக்கணத்தை உருவாக்குகிறது. மெல்ல அந்த இலக்கணம் வளர்ச்சி அடைந்து அக்குழந்தையின் ஐந்தாவது வயதில் பெரியவர்களுடைய இலக்கணத்தின் குணங்களைப் பெறுகிறது. ஐந்து வயது நிரம்பிய குழந்தை மொழியைக் கற்றுவிடுகிறது. அது தன்னுடைய அனுபவங்களைத் தன்னுடைய மொழிமூலம் வெளிப்படுத்த இயலும். உடல் வளர்ச்சியோடு (Biological Development) மொழி வளர்ச்சியும் இணைந்து செயல்படுகிறது. உழைப்பு என்ற சொல்லை எந்தப் பொருளில் வைத்துப் பொருத்திப் பார்ப்பது என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளது. உடல் வளர்ச்சி என்பது எவ்வாறு இயற்கையானதோ குழந்தைகளுக்கு மொழி ஈட்டமும் (Language Acquisition) அவ்வாறு ஒரு சமூகச் சூழலில் இயற்கையானது. இங்கு நிகழ்கின்ற மொழி ஈட்டம் நினைவுசார் (Conscious) நடவடிக்கை அல்ல.

## மொழியும் சிந்தனையும்

ஆய்வுக்குரிய இலக்கண நூல்களை எடுத்துக்கொள்ளும் முன்

மொழிக்கும் சிந்தனைக்கும் உள்ள தொடர்பைக் கோடிட்டு அவர் காட்டுகிறார். இங்கு மொழியோடு தர்க்கமும் (Logic) உளவியலும் (Psychology) உறவு கொள்கின்றன. மொழியின் இலக்கணம் தொடக்கநிலை தருக்கத்தின் பகுதியாகும். அது சிந்தனைச் செயல்முறையின் பகுப்பு ஆகும். பொதுச் சிந்தனையையும் (Universal Thought) மொழியின் வடிவங்களையும் (Forms of Language) இணைப்பது இலக்கணத்தின் கொள்கைகளும் விதிகளும் ஆகும். யெஸ்பர்சன் அவர்கள் கருத்தைச் சிவத்தம்பி அவர்கள் (1999:12) முன் வைக்கிறார்.

மொழி அது பேசப்படும் குழுவின் சிந்தனை முறைமையை உள்ளடக்கியுள்ளது என்ற கருத்தினை அவர் வலியுறுத்துகிறார். மேலும் இலக்கணத்துக்கும் சிந்தனைக்கும் உள்ள தொடர்பும் மொழிக்கும் உற்பத்தி, சமூக உறவுகளுக்கும் உள்ள தொடர்பும் சமூக உளவியல் சிந்தனை வரலாற்றுக்குக் கருவூலமாகி விடுகின்றன. அதாவது சமூக அமைப்புக்கும் / அதனுடைய உளவியல் சிந்தனைக்கும் இலக்கணத்திற்கும் அதன்வழி வெளிவரும் மொழிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

## சமூக வரலாறும் இலக்கணங்களும்

சமூக வரலாற்றை அறியப் பயன்படும் அறிவுத்துறைகளுள் மொழித்துறை முக்கியமானது. இந்த அணுகுமுறை மூலம் வரலாறு மேலும் தெளிவுபடுத்தப்படும் என்ற நம்பிக்கையில் நம்முடைய தமிழ் இலக்கணங்களைப் பார்க்கலாம் என்ற முயற்சியின் விளைவுதான் இந்த நூல். முக்கியமாக, தொல்காப்பியமும் நன்னூலும் அவற்றை ஒட்டிய உரைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. தொல்காப்பியம் முழு நூலாக முதலிலேயே வந்தது என்பதைவிட 'ஏறத்தாழ கி.மு.முதல் நூற்றாண்டு முதல் கி.பி.4-5 ஆம் நூற்றாண்டுகட்குரியனவான பல வழக்காறுகள் இருப்பதால் பல்வேறு காலகட்டங்களில் இயற்றப்பெற்று, கி.பி.4-5 நூற்றாண்டில் அது இன்று கொண்டுள்ள இறுதி நிலையினைப் பெற்றிருக்கலாம், என்ற கமில் ஸ்வெலபில் அவர்களின் கருத்தைச் சிவத்தம்பி அவர்கள் (1999:13-14) ஏற்றுக்கொள்கிறார். இக்கருத்தினைக் காலம் சென்ற பேரா.க.கணபதிப்பிள்ளை கூறிக் கேட்டதுண்டு என்றும் அவர்

குறிப்பிடுகிறார். நன்னூலின் காலம் 13 ஆம் நூற்றாண்டு என்பதில் சர்ச்சை இல்லை. இவ்விரு நூல்களும் சமண மரபில் வந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விரு நூல்கள் மாத்திரமின்றி இவைகளுக்கு எழுதப்பட்ட உரைகளும் நன்னூலுக்குப் பின்னர் தோன்றிய இலக்கண நூல்களும் மேலை நாட்டார் தமிழுக்கு உருவாக்கிய இலக்கணங்களும் முக்கியமானவை என்பதை அவர் குறிப்பிடத் தவறவில்லை. உரையாசிரியர்கள் மொழியில் ஏற்பட்ட மாற்றங்களைக் கவனித்திருக்கிறார்கள் என்பது வெளிப்படை. ஆனால் மாற்றங்களை மூல இலக்கணங்களின் வரம்பிற்குள்ளேயே விவரிப்பதில் ஆர்வம் காட்டினார்கள். ஒரு காலகட்டத்தில் உருவான இலக்கணம் அந்தக் காலகட்டத்தைத் தாண்டி மொழியில் ஏற்பட்ட மாற்றங்களையும் உள்ளடக்கி அது விவரிக்கும் என்பது நம் மரபின் நம்பிக்கை. ஆகையால்தான் தொல்காப்பிய இலக்கண வரம்புக்குள்ளேயே தமிழில் ஏற்பட்ட மாற்றங்களை விவரிக்கும் உரையாசிரியர்களின் முயற்சியை நாம் பார்க்கிறோம்.

## திணை

திணை, பால், எண், வேற்றுமை, வினையமைப்பு என்ற இலக்கணப் பகுப்பின் மூலம் சமூக வரலாற்றுப் பின்னணியைத் தெளிவுபடுத்தச் சிவத்தம்பி அவர்கள் முயன்றிருக்கிறார். முதலில் அவர் திணை என்ற இலக்கணக் கருத்தை ஆராய முற்படுகிறார். இச்சொல் தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரத்திலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. திணை என்ற சொல் ஒழுக்கம், பொருள் / உள்ளடக்கம், குடி என்ற பொருளிலும் கையாளப்பட்டுள்ளதை உரையாசிரியர்களின் உரைகளிலிருந்து சிவத்தம்பி அவர்கள் எடுத்துக்காட்டுகிறார். குடி என்பது குடும்பம், கணம், குடியிருப்பு ஆகிய பொருளைச் சுட்டுகிறது என்று அவர் கூறுகிறார். தொல்காப்பியம் கண வாழ்க்கையிலிருந்து நிலமானிய வாழ்க்கைக்குத் தமிழ்ச் சமூகம் மாறுகிற வரலாற்றுப் போக்கை நமக்குத் தெரிவிக்கிறது. ஒரு மாறும் சமூகத்தின் இயல்பைக் காட்டுவதால் தொல்காப்பியத்தில் கண வாழ்க்கைமுறைக் கூறுகளும் நிலமானிய வாழ்க்கைமுறைக்

கூறுகளும் காணப்படுகின்றன என்கிறார் அவர். திணையில் மக்களை உயர்திணையாகப் பகுத்த பண்பு கண வாழ்க்கையின் முக்கியக் கூறான கூட்டுவாழ்க்கையின் நினைவுவழியாக வந்தது என்பதை அவர் (சிவத்தம்பி 1999:21) நன்கு விளக்கியுள்ளார். ஒரு சமுகத்தின் வரலாற்றில் நிகழும் சமூக மாற்றத்தை இலக்கணப்பகுப்பு பிரதிபலிக்கிறது என்ற கருத்து இங்கு வலியுறுத்தப்படுகிறது. நன்னூல் தமிழுக்கு இலக்கணம் வகுத்தாலும் அது இயற்றப்பட்ட காலத்தின் அமைப்பு தொல்காப்பியத்தினுடைய சமூக அமைப்பிலிருந்து மாற்றம் பெற்றது. நிலமானிய சமூக அமைப்பு தமிழ்ச் சமூகத்தில் இறுக்கநிலை அடைந்த பின்னர் நன்னூல் இலக்கணம் தோன்றுகிறது.

மத நிலைப்பட்ட கருத்துகள் பெருமாற்றம் அடைந்த நிலையை நன்னூலில் வரும்

மக்கள் தேவர் நரக ருயர்திணை
மற்றுயி ருள்ளவு மில்லவுமஃறிணை நன். 261

என்ற சூத்திரம் காட்ட, தொல்காப்பியம் மக்களைச் சுட்டுகின்ற சொற்கள் உயர்திணை என்று குறிப்பிடுகிறது.

உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை யென்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே தொல்.சொல்.1

சேனாவரையர், 'மக்களை யென்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணை யென்று சொல்லுவர்' என்றும் 'ஈண்டு மக்கள் என்னும் உணர்வை' என்றும் (தொல். சொல்.1959: 3-4) கூறுகிறார். மேலும் மக்களாக இருப்பினும் மக்களென்று கருதப்படாவிட்டால் அவர்களைக் குறிக்கும் சொற்கள் அஃறிணையாகக் கருதப்படும் என்றும் அவர் இக்கருத்தை விவரிக்கிறார். இப்பாகுபாடு பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்துள்ளது. இது வளர்ந்த சமூகத்திற்குப் பொருந்தும். ஆனால் இலக்கணம் அது தோன்றிய காலத்திற்கு மட்டுமன்றி அச்சமூக / பல்வேறு பொருளாதார அடித்தளங்களினது வரலாற்றுக் காலம் முழுவதையும் தழுவி நிற்கிறது. குழுநிலை

வாழ்க்கைக்குப் பொருந்துமாறு மக்களை உயர்திணையாகவும் மக்கள் தவிர்த்தவற்றை அஃறிணையாகவும் தொல்காப்பியம் பகுத்துள்ளது என்று சிவத்தம்பி அவர்கள் (1999:19) கருதுகிறார்.

**பால்**

திணையோடு தொடர்புடைய பால், எண் ஆகிய இலக்கணப் பிரிவுகளை அவர் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறார். உயர்திணையில் ஒருமை / பன்மை பாகுபாடு கொள்ளப்பட்டு ஒருமையில் ஆண் / பெண் பாகுபாடு செய்யப்படுகிறது. பலர்பாலில் ஆண் / பெண் வேறுபாடின்றி இரு பாலுக்கும் பொதுவானதாக உள்ளது. ன் ஆண்பாலையும் ள் பெண்பாலையும் ர், ப, மார் ஆகியவை பலர் பாலையும் சுட்டுவதாகத் தொல்காப்பியம் (சொல். 5-7) கூறுகிறது. எண்ணில் ஒருமையைச் சுட்டும் ன் என்பதும் ள் என்பதும் திணையையும் பாலையும் இணைத்தே சுட்டுகின்றன. அதேபோல் ர் என்பதும் ப என்பதும் மார் என்பதும் (உயர்) திணையையும் (பலர்) பாலையும் ஒட்டுமொத்தமாகவே குறிக்கின்றன. ஒவ்வொரு விகுதியும் மூன்று செய்திகளைத் தெரிவிக்கின்றன.

| ன் | ள் | ர்,ப,மார் |
|---|---|---|
| + உயர்திணை | + உயர்திணை | + உயர்திணை |
| + ஆண்பால் | - ஆண்பால் | 0பால் |
| - பன்மை | - பன்மை | + பன்மை |

அஃறிணையில் பால் வேறுபாடு என்பது ஒருமை / பன்மை என்பதோடு சுருங்கிவிடுகிறது. ஆண் / பெண் வேறுபாடு அஃறிணையில் இல்லை. பால் என்ற சொல்லுக்குப் பகுப்பு / பிரிவு என்ற பொருளை ஒதுக்கி ஆண் / பெண் என்ற பகுப்பைக் கொண்டால் அஃறிணையில் பால் பாகுபாடு இல்லை. ஒருமை / பன்மை என்ற பாகுபாடுமட்டும் காணப்படுகிறது. து,று,டு என்பவை அஃறிணையில் ஒருமையையும் அ,ஆ,வ, என்பவை பன்மையையும் குறிக்கின்றன.

| து,று,டு | அ,ஆ,வ |
|---|---|
| - உயர்திணை | - உயர்திணை |
| - பன்மை | + பன்மை |

உயர்திணையில் ஒருமையில் மட்டும் ஆண் / பெண் பால் வேறுபாடு காணப்படுவதற்கும் பன்மையில் பொதுவானதாக இருப்பதற்கும் சமூக வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் நிலவிய சமூக நிலையே காரணம் என்று சிவத்தம்பி அவர்கள் கூறுகின்றார். அவர் (சிவத்தம்பி 1999:27), "மக்களின் தனிப்பட்ட உறவுகளின் போதே, சம்பந்தப்பட்டவர்களின் பால் வேறுபாடு முக்கியமானதாக அமைகின்றது. மக்களைத் தொகுதியாக நோக்கும் போது அப்பால் வேறுபாடு முக்கியமற்றதாகின்றது" என்று கூறுகிறார். குழுநிலை விவாகம் என்ற வரலாற்றுக் கால கட்டத்திற்குப் பின்னர் தனிமனிதத் தொடர்புகள் தவிர்த்த மற்றைய சமூகப் பொதுவான உறவுகளில் அவனும் அவளும் பொதுவாகி பால் வேறுபாடற்ற பலர்பாலாகி விடுகிறார்கள். மேலும் காலப்போக்கில் சமூகத்தில் ஏற்பட்ட உயர்வு / தாழ்வு என்று மக்களைப் பிரிக்கும் போக்கு மொழியில் மரியாதை / மரியாதையில்லாமை என்று வெளிப்படுத்தும் கூறுகளாக மொழி அமைப்பில் உருவாகின. பன்மையைக் குறிக்கும் வடிவம் ஒருமையில் மரியாதையைச் சுட்டும் கூறாக மாற்றம் பெறுவதை நாம் மொழியில் காண்கிறோம். அதனைத் தொல்காப்பியம்,

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய உயர்சொற் கிளவி
இலக்கண மருங்கின் சொல்லாறல்ல தொல்.சொல். 227

என்று கூறுகிறது. பன்மைக்குரிய வடிவத்தை ஒருமையைக் குறிக்கப்பயன்படுத்தும்போது அது மரியாதையைக் குறிப்பதாக மாறிவிடுகிறது. பன்மைக்குரிய வடிவமும் மாற்றம் பெறுகிறது. சமூக நிலையில் ஏற்பட்ட வேறுபாடுகள் மொழியின் அமைப்பிலும் அதன் முத்திரையைப் பதித்துவிடுகிறது. மரியாதை நிமித்தமாகப் பன்மையைப் பயன் படுத்தாத நிலையும் இருந்திருக்கலாம் என்பதற்குத் தொல்காப்பியப் பெயரியல் சூத்திரங்கள் (186, 187) சுட்டுவதாகச் சிவத்தம்பி (1999:31) அவர்கள் குறிப்பிடுகிறார். பேச்சுத் தமிழில் கிராம / அடிமட்ட நிலையில் வாழ்வதாகக் கருதப்படும் மக்களிடம் மரியாதை / மரியாதையற்ற நிலை என்ற வேறுபாடு காணப்படுவது இல்லை. கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் ஒருமையில்

குறிப்பிடுவதை நாம் பார்க்கலாம்[1] மத்திய வர்க்கக் குடும்பத்திடம் தான் இவ்வேறுபாடு பற்றிய பிரக்ஞை கூடுதலாக உள்ளது.

**வேற்றுமை**

வேற்றுமை என்ற கருத்து நம்முடைய இலக்கணங்களில் முக்கிய இடத்தை வகிக்கிறது. பெயர் எழுவாயாகச் செயல்படும் போது எவ்வித வடிவ வேறுபாடின்றி இயல்பாக உள்ளது. ஆனால் செயப்படு பொருள், கருவி, நீங்கல், கிழமை முதலாய வேற்றுமைப் பொருள்களை உணர்த்தும்போது பெயருடன் சில வேற்றுமை உருபுகள் இணைக்கப்படுகின்றன. தமிழில் எட்டு வேற்றுமைகள் உள்ளதாக மரபிலக்கணங்கள் குறிக்கின்றன. வேற்றுமை உருபுகளின் அடிப்படையிலோ வேற்றுமை உறவுகளின் அடிப்படையிலோ இலக்கணங்கள் கூறும் வேற்றுமைகளின் எண்ணிக்கை தமிழின் இயல்புக்குப் பொருந்தி வரவில்லை என்று கால்டுவெல் கூறியதைச் சிவத்தம்பி அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்.[2]

வேற்றுமைகளால் குறிக்கப்படும் உறவுகள் சமூக அமைப்பின் நிலையோடு நெருக்கமானவை என்பது இங்கு வலியுறுத்தப் படுகிறது. சான்றாக, கருத்தா என்பது இருவகையாகப் பிரிக்கப்பட்டதில் சமூகநிலை பிரதிபலிக்கப்படுவதை நாம் காண முடிகிறது. ஏவுதற் கருத்தா, இயங்குதற் கருத்தா என்ற கருத்துநிலைப் பிரிவு சமூகத்தில் தொழில் புரியும் குழுவும் அதனை மேற்பார்வையிட்டு அப்பணியைப் புரியும்படி தூண்டக்கூடிய குழுவும் என இருவகைப் பிரிவுகள் உழைப்பின் மேல் காட்டப்பட்டன. சமூகத்தில் இத்தகைய பிரிவுகள் உழைப்பின் அடிப்படையில் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டதை நமக்குக் காட்டுகின்றன.

வேற்றுமையை அடுத்து வினையமைப்பின் தன்மையை சிவத்தம்பி அவர்கள் ஆராய்கிறார். வினையைப் பொதுவாக முற்றுவினை / தெரிநிலை வினை (Finite verb) என்றும் குறிப்புவினை (Appellative verb) என்றும் நம் இலக்கணங்கள் தமிழில் உள்ள வினைகளை மேல்நிலையில் வகைப்பாடு செய்கின்றன. வினையின் இன்னொரு முக்கியக் கூறு கால இடைநிலைகளை ஏற்பது. வினையில் மூன்று பகுதிகள் உள்ளன.

(1) செயலைக் குறிக்கும் பகுதி (2) காலத்தைக் காட்டும் இடைநிலைகள் (3) எழுவாயாகச் செயல்படும் பெயரின் திணை, பால், எண் ஆகியவற்றைக் குறிக்கும் விகுதி காலத்தை அடுத்து வரும். திராவிட மொழியியல் ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் சிலர் தொல் திராவிட மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைச் சுட்டும் விகுதிகள் வினையோடு இல்லாத நிலையில் இருந்தது என்றும் பின்னர் படிப்படியாக இத்தகைய விகுதிகள் வினையோடு தோன்றின என்றும் கருதுகின்றனர்? சிக்கல் இல்லாத எளிய பழங்குடி மக்களின் சமூக அமைப்புக்கும் அச்சமூகத்தால் பயன்படுத்தப்படும் மொழியின் எளிய அமைப்புக்கும் தொடர்பு உள்ளதை அவர் வலியுறுத்துகிறார். சங்ககால மொழியின் வினையமைப்பு இன்றைய மொழியின் வினையமைப்பைப் போல சிக்கலானது அல்ல என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

## வினை

இலக்கணங்கள் வினைகளைத் தன்வினை / பிறவினை என்று வகைப்பாடு செய்துள்ளன. வரதராசன் போன்றோர் இதனைத் தன்வினை, பிறவினை, இயக்குவினை என மூன்றாகப் பகுப்பார்கள். பிறவினை என்ற வகைக்குள்ளேயே இயக்குவினையையும் அடக்கலாம் என்று வேலுப்பிள்ளை (1999) போன்றோர் கருதுகிறார்கள். சமூக அமைப்பு நிலையில் உழைக்கும் குழு என்ற ஒன்றும் சொத்துரிமையால் உழைப்பை வாங்கும் குழு என்ற ஒன்றும் உருப்பெறத் தொடங்கிவிட்டன என்ற சமூக வரலாற்றை இப்பாகுபாடு பதிவு செய்துள்ளது. இது சமூக வரலாற்றின் ஒரு முக்கியக் கட்டம்.

செய்வினை, செயப்பாட்டுவினை என்ற வகைப்பாட்டைச் சிவத்தம்பி அவர்கள் எடுத்துக்கொள்கிறார். செயப்பாட்டுவினை என்ற பிரிவு தமிழில் பழங்காலத்தில் இல்லை என்று கால்டுவெல் போன்ற அறிஞர்கள் கருதியதாகத் தெரிகிறது.[4] ஆனால் செயப்பாட்டுவினை வாக்கியம் வெளிப்படுத்தும் சில கூறுகளை வேறுவகை வாக்கியம் உணர்த்தும் என்பதைத் தொல்காப்பியம் (சூத்.246) சுட்டுகிறது.

செயப்படு பொருளைச் செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும் வழக்கியன் மரபே

தொல்.சொல்.246.

பாறை உருண்டது. வங்கி நாளை திறக்கும் போன்ற வாக்கியங்களை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். தொழிலின் பயனை உறும் பொருள் இங்குத் தொழிலைச் செய்யும் கருத்தாவைப் போலச் செயற்படுகிறது. இத்தகைய வாக்கியங்களுக்கும் செயப்பாட்டுவினை வாக்கியங்களுக்கும் பொருண்மை அடிப்படையில் ஒரு உறவு இருப்பதை நாம் உணரலாம்.

தற்காலத் தமிழில் செயப்பாட்டுவினை வாக்கியங்கள் ஆட்சித்துறைகளில் அதிகம் பயன்படுத்தப்படுவதை நாம் காணலாம். குறிப்பாக, இது ஆங்கிலத்தின் தாக்கம் என்று கருதப்படுகிறது. பேசுபவனுக்கோ கருத்தாவுக்கோ முக்கியத்துவம் தரப்படாமல், ஒரு தொழிலின் பயனை உறுபவனுக்கும் செயலுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இத்தகைய மொழிப்பயன்பாடு ஆட்சித்துறைகளிலும் அறிவியல் துறைகளிலும் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய மொழிப்பயன்பாடு "நிர்வாக அமைப்புகளினால் மக்களுடன் நேரடித் தொடர்பற்ற, தனிமனித உறவழிந்த (Impersonal) சமூகச் சூழ்நிலையை" சித்தரிக்கிறது. (சிவத்தம்பி 1999:50) செய்பவன் / தொழில் புரிபவன் (கருத்தா) செயலிலிருந்து பிரிக்கப்படுகிறான். இதேபோல் கூட்டுவினைகள், துணைவினைகள் ஆகியவை புதிய செயல்பாடுகளை - சமுதாயச் சிந்தனைகளை - இயல்பாகவும் எளிதாகவும் எடுத்துக் கூற இவ்வினையாக்கங்கள் உதவுகின்றன என்று சிவத்தம்பி அவர்கள் (1999:51) குறிப்பிடுகிறார்.

## நிறையும் குறையும்

மொழியின் உறுப்புகளையும் அவை சொல்லிலும் தொடரிலும் வாக்கியத்திலும் அமைந்து கிடக்கிற முறையை விவரிப்பது மொழியியல் என்று கூறுகிற வரையறை குறுகியது. ஆனால் அது மொழியியலின் அடிப்படையான மையமான வரையறை. அது தர்க்க ரீதியில் முதன்மையானது. மொழியியல் இந்தச்

சுருங்கிய எல்லைக்குள் அடங்காமல் சமூக / மனித ஒட்டுமொத்த நடவடிக்கைகளோடு இணைக்கப்பட வேண்டியது. மொழி பண்பாடு, வரலாறு, சமூகம், இலக்கியம் ஆகியவற்றோடு பின்னிப் பிணைந்தது. மொழியின் தரவுகள் எவ்வாறு பண்பாட்டையும் சமூக அமைப்பையும் சமூக வரலாற்றையும் புரிந்துகொள்ளப் பயன்படுத்தப்படலாம் என்பது மொழியியல் ஆய்வின் தளத்தை விரிவுபடுத்தும் முயற்சியாகும். மொழியியலில் சமூக மொழியியல் என்ற பிரிவு சமூகத்திற்கும் மொழிக்கும் உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகிறது. சமூக அமைப்பின் மாற்றங்கள் மொழியில் பிரதிபலிக்கின்றன.

அறிவியலாலும் தொழில் நுட்பத்தாலும் மாற்றத்திற்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகத்தின் பாதிப்பைத் தமிழ் மொழியிலும் நாம் காணலாம். புதிய புதிய சொற்கள் தமிழில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தும் தனித்தன்மை வாய்ந்த நடை ஒன்று உருவாகிக்கொண்டிருக்கிறது.[5] தமிழ் பயன்படுத்தப்படும் எல்லைகள் விரிந்து கொண்டிருக்கின்றன. மொழிப் பயன்பாட்டின் எல்லை விரிவாக்கம் மொழி அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவருகிறது. சமூக மாற்றமும் மொழி மாற்றமும் நெருக்கமாக உள்ளன. இந்தப்பின்னணியில் பார்க்கும்போது, சிவத்தம்பி அவர்களின் ஆய்வு பாராட்டப்பட வேண்டியது. சமூக வரலாற்றைப் புரிந்துகொள்ள எவ்வாறு இலக்கணங்கள் துணை நிற்கின்றன என்பதை இவ்வாய்வு நன்கு வெளிப்படுத்துகிறது. தமிழ் மொழி ஆய்வில் மார்க்சீயத்தின் வரலாற்றுப் பொருள் முதல்வாத அணுகுமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு முன்னோடியான நல்ல எடுத்துக்காட்டு. இதற்காகச் சிவத்தம்பி அவர்கள் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர்.

இத்தகைய ஆய்வில் சில பிரச்சனைகளையும் நாம் எதிர் நோக்க வேண்டியுள்ளது. முதலாவது மொழியின் தோற்றம் பற்றிய கருத்து. நாம் முன்பு குறிப்பிட்டுள்ளது போல இங்கு ஊகங்கள் முன்வைக்கப்படுகின்றன. இவற்றை நிறுவுவதற்குரிய மொழித் தரவுகளும் மற்றைய சான்றுகளும் (வெவ்வேறு துறைகளி லிருந்து) தேவைப்படுகின்றன. இங்கு முன்வைக்கப்படும் கருதுகோளை எவ்வாறு பொய்ப்பிப்பது (Falsify) என்பது

தெளிவாக விளங்கவில்லை. எத்தகைய தரவுகள் இத்தகைய கருதுகோளைப் பொய்ப்பிக்கும் என்ற அணுகுமுறை தெளிவு பெறாமல் உள்ளது.

குழு வாழ்க்கை நிலையிலிருந்து நிலமானிய வாழ்க்கை முறைக்குத் தமிழ்ச் சமூகம் மாறிக்கொண்டிருக்கும் நிலையைத் தமிழின் திணை பால் வகைப்பாடு பிரதிபலிக்கிறது என்ற கருத்தை நிறுவ மற்ற மொழிகளில் இத்தகைய பாகுபாடு மேலே சுட்டிய சமூக அமைப்பின் மாற்ற வரலாற்றுக் கட்டத்தில் செய்யப்பட்டது என்பது தகுந்த சான்றுகளின் மூலம் நிறுவப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் மாற்றமும் அம்மொழி அமைப்பின் வகைப்பாடும் நெருக்கமானவை என்பதை உறுதிசெய்ய உலகின் / இந்தியாவின் மற்ற மொழிகளிலிருந்து தரவுகளைக் கொண்டு நிரூபிக்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இல்லையென்றால், நாம் ஊகம் செய்யும் நிலையில் இருக்கிறோம் என்று பொருள்படும்.

வினையமைப்பில் பிறவினை / இயக்குவினை என்ற பாகுபாடு உழைப்போர் / உழைப்பைப் பெற இயக்குவோர் என்ற சமூக வேறுபாடு தோன்றிய சமூக வரலாற்றுக் கட்டத்தைச் சுட்டுகிறது என்ற வாதத்திற்கு எதிர் நிலையில்

1. குழந்தை சோறு உண்டது
2. அம்மா குழந்தைக்குச் சோறு ஊட்டினாள்
3. தேர்வு நடந்தது
4. அரசு தேர்வை நடத்தியது
5. நாய் ஓடியது.
6. பையன் நாயை ஓட்டினான்

போன்ற வாக்கியங்களை நாம் முன்வைக்கலாம். சமூக வாழ்க்கையை ஒட்டி மட்டுமன்றி நம்முடைய இயல்பான வாழ்க்கையில் சந்திக்கும் சூழல்களைக் குறிப்பதற்குக் கூட இயக்குதற் கருத்தா என்ற பாகுபாடும் பிறவினை / இயக்குவினை என்ற பாகுபாடும் தேவைப்படுகின்றன. சமூக அமைப்போடு ஒட்டிய பாகுபாடுகள் மட்டுமன்றி தனிமனித / குடும்பச் சூழல்களை ஒட்டிய தேவைகளும் மொழியின் அமைப்பில் வேறுபாடுகளை உண்டாக்கக் கூடிய சாத்தியம்

உள்ளது. மேலே கூறிய தடைகளை மீறும் அளவுக்குத் தேவையான சான்றுகளைத் தமிழிலிருந்தும் மற்ற மொழிகளிலிருந்தும் கொண்டுவந்து இந்நிலைப்பாட்டையும் அணுகுமுறையையும் பலப்படுத்த வேண்டும். மேலே கூறியவை எதிர்கால ஆய்வுகள் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள். இருப்பினும், சிவத்தம்பி அவர்கள் புதிய தடத்தையும் அணுகுமுறையையும் அறிமுகப்படுத்தியுள்ளது தமிழ் மொழி ஆய்வில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்.

## குறிப்பு

1. இன்றும் கிராம மக்களிடையே கணவன் மனைவியை 'நீ' என்று ஒருமையில் கூறுவதும் அதே போல் மனைவி கணவனை 'நீ' என்று ஒருமையில் கூறுவதும் பேச்சுவழக்கில் சாதாரணமாகக் காணப்படுகின்ற நிகழ்வு. நகர மக்களிடை கூட பொருளாதாரத்தில் பின்தங்கிய அடிமட்ட மக்களின் பேச்சுவழக்கில் இவ்வேறுபாடு காணப்படுவது இல்லை.

2. "Tamil grammarians, in following the order of the Sanskrit cases, have also adopted or imitated the Sanskrit mode of denominating them .. They have fixed a number of each case in the same order as in Sanskrit first case, second case, & c., to eighth case" (Caldwell 1913:255)

3. "தமிழ் முதலிய திராவிட மொழிகளில், பெயர்ச்சொற்கள் திணை பால் பாகுபாடற்ற நிலையிலிருந்து இருதிணை ஐம்பாற் பகுப்பு படிப்படியே வளர்ந்து அமையப் பெற்றுள்ளன எனலாம்" (வேலுப்பிள்ளை 1999:135) இம் மேற்கோள் சிவத்தம்பி அவர்களின் (1999:25) நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

" It may, indeed, be stated as a general rule that all primitive Dravidian nouns are destitute of gender, and that every noun or pronoun in which the idea of gender is formally expressed being a compound word, is necessarily of later origin than the uncompounded primitive" (Caldewell 1913:220)

தெ.பொ.மீனாட்சிசுந்தரம் அவர்களும் இதே கருத்தைக் கொண்டிருந்தார். தெ.பொ.மீ. அவர்களின் கருத்தை அறிய அரங்கனின் (2001) கட்டுரையைப் பார்க்கவும்.

4. "The *Dravidian verb is entirely destitute of a passive* voice, properly so called, nor is there any reason to suppose that it ever had a passive" (Caldwell 1913:263)

5. *சமீக காலமாக*, *அறிவியல்தமிழ்* என்ற தொடர் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ் மொழி அறிவியல் செய்திகளைத் தெரிவிக்க எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை இத்துறையைச் சார்ந்தவர்கள் ஆராய்கிறார்கள். கலைச் சொற்கள் குறித்த ஆய்வு இப்பிரிவில் அடக்கப்படுகிறது. அறிவியல் தமிழ்த்துறை என்ற துறையே தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தனியே இயங்குகிறது.

## நோக்கீடு


தொல்காப்பியம் : சொல்லதிகாரம் (சேனாவரையம்) தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் சென்னை (மறுபதிப்பு 1959)

அரங்கன், கி.(2001) "திராவிட மொழிகளில் பாலும் எண்ணும்: தெ.பொ.மீ.யின் கோட்பாடு" பேரா.கி.கருணாகரன் மணிவிழா மலர் பக்.12-17. பார்க் டிரஸ்ட்: திருப்பூர்.

சிவத்தம்பி, கா.(1999) இலக்கணமும் சமூக உறவுகளும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்: சென்னை (முதல் பதிப்பு 1982)

தாமோதரன், அ.(பதிப்பாசிரியர்) (1999) நன்னூல் மூலமும் விருத்தியுரையும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் : சென்னை.

வேலுப்பிள்ளை, ஆ.(1996) தமிழ் வரலாற்றிலக்கணம், சென்னை.

Caldwell, R.(1913) Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, Kegan Paul, Trubner & co., Ltd. : London (Third edition)

Stalin, J.V.(1976) Marxism and Problems of Linguistics Foreign Languages Press: Peking (First edition 1972.)

# நெற்சுர நாடு

*திரு செ.மா.கணபதி*

*(முன்இதழ் தொடர்ச்சி)*

கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாயமலைசிவன் கோயில் கல்வெட்டில் நென்மலி ஊர்ச்சபையாரில் சிலராக, நிலையுடையபாண்டியதேவன், நரலோகசிங்கதேவன், புவனிசிங்கதேவன், உத்தமபாண்டிதேவன், கைவிளங்கு பாண்டியதேவன் போன்றவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

பண்டைய நெற்சுரநாட்டில், வணிகப் பெருங்குடி மக்களும் வாழ்ந்து வந்துள்ளனர். எட்டி என்ற பட்டமே வணிகர்களுக்கு வழங்கப்படும் ஒரு சிறப்பு விருதுதான். இதைப் பார்க்கின்றபோது முற்காலப் பாண்டியர் காலத்தில் இருந்த எட்டி என்ற படைத்தலைவனும் இவ்வினத்தைச் சேர்ந்தவனாக இருக்க வாய்ப்புண்டு. தவிர, சோழ பாண்டியராட்சியின்போது, இரணசிங்க வீரசெட்டி, சுத்தவீரசெட்டி போன்றவர்களும் சோழநாட்டைச் சேர்ந்த வியாபாரி கலியனம்பலமும் இந்நெற்சுரநாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர். எனவே, வணிகத் தொழில்புரிபவர்களும் பண்டைய நெற்சுரநாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர் எனத் தெரிகிறது.

## வேளாளர்

பண்டைக் காலத்திலிருந்தே நம் நாடு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு திகழ்ந்தமையால் வேளாண்பெருமக்கள் நம் சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழ்ந்தனர். பண்டைய நெற்சுரநாட்டில், ஆறு, ஏரி, குளம், குட்டை, கால்வாய், கிணறு என அனைத்து வளமிக்க நீர்நிலைகளும் வளமான விளைநிலங்களும் ஏராளமாக இருந்ததை முன்னர்க் கண்டோம். எனவே, இங்கிருந்த விளைநிலங்கள், ஆறு, ஏரி, குளம், குட்டை கால்வாய்களாலும், இந்த நீர்நிலைகளில் தண்ணீர் வற்றிய காலங்களில் கிணற்று நீரினாலும் விவசாயம் செய்திருப்பது தெரியவருகிறது. எனவே, பண்டைய நெற்சுரநாட்டில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலானோர்

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளாண் பெருங்குடிமக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்சுரநாட்டில், நாடு என்னும் நிர்வாக சபையில் அங்கம் வகித்த நெற்சுரநாட்டு நாட்டார் அனைவரும் நிலவுடைமையாளர்களான வேளாண்பெருங்குடி மக்களேயாவர். கழுகுமலைப் பகுதியைச் சேர்ந்த கல்வெட்டு மற்றும் செப்பேட்டுச் சாசனங்களில், நெற்சுரம், நென்மலி, வளமிக்க மருதவேலி இளநெற்சுரம் போன்ற குறிப்புகள் பண்டைய நெற்சுர நாட்டில் நெல் அதிகமாக விளைவிக்கப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகிறது எனலாம்.

## இடையர்

வேளாண்பெருங்குடியினருக்கு அடுத்தபடியாக, கன்று காலிகளைப் பராமரிக்கும் இடையர் இனத்தவர்கள் இங்கு வாழ்ந்திருக்கின்றனர். இந்த இடையர்களால் பொதுமக்களுக்கு பால், தயிர், நெய், மோர் போன்ற பதார்த்தங்கள் கிடைத்திருக்க வேண்டும். தவிர, நெற்சுரநாட்டிலுள்ள சமணப்பள்ளியில் விளக்கேற்றுவதற்காகவும் இவர்கள் நெய் வழங்கியுள்ளனர். இவர்கள் இங்குள்ள கல்வெட்டுச் சாசனங்களில் இடையன், கோன் எனக் குறிப்பிடப்படுகின்றனர். இடையன் சேந்தன், இடையன் மணிதேயன்சாத்தன் போன்ற பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவர்கள்தவிர, திருநெற்சுரத்தில் வாழ்ந்த இடைச்சாதியினரின் தலைவனாக ஒருவன் இருந்துள்ளான். இவன் கல்வெட்டில் திருநெற்சுரத்துக்கோன் என அழைக்கப்படுகிறான். இவனது பெயர் என்னவென்று குறிப்பிடப்படவில்லை. ஆனால் இவனது மகன் சாத்தன்கண்ணன் என்பவனும், சாத்தன் மகன் கண்ணன் சாத்தன் என்பவனும் கல்வெட்டுச் சாசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் பண்டைய நெற்சுரநாட்டில் வாழ்ந்த இடையர் இனத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் ஆட்டிடையர், மாட்டிடையர் என இரு பிரிவினர் இன்று வரை இப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களை கொடுங்கோல் கோவலர், கோவினத்தார் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

## தச்சர் கொல்லர்

வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட நெற்சுரநாட்டில், கொல்லர்களில் ஒரு பிரிவினரான கல்தச்சர்களும் வாழ்ந்துள்ளனர். நெற்சுரநாட்டுச் சமணத்தலங்களில் ஒன்றான அரைமலை ஆழ்வார்கோயிலில் நடந்தேறிய கல்லில் சிலை வடித்தல், கோயிலை நிர்மாணித்தல் போன்ற திருப்பணிகளில் சுந்தரதட்டன் என்பவன் சிற்ப ஆசிரியராக, தலைமைப்பதவி வகித்துள்ளான். இவனைச் சாசனம் நெற்சுர நாட்டுப் பெருங்கொல்லன் என்று குறிப்பிடுகிறது. எனவே, நெற்சுரநாட்டில் ஏராளமான சிற்பக்கலைஞர்கள், கல்தச்சர்கள் இருந்துள்ளனர் என்பது இதன்மூலம் தெரியவருகிறது. வானரமுட்டியில் சிவன்கோயில் கோமுகையை வடிவமைத்தவர் சொக்கன் புருசோத்தமன் என்ற சிற்பி. இவன் பிற்காலப்பாண்டியர் காலத்தைச் சேர்ந்தவன். இவன், வானரமுட்டி சிவன்கோயில் கல்வெட்டில் (கி.பி.13ஆம் நூ) தேசியர் சிறிய தட்டான் என்னும் சிறப்பு விருதுப் பெயருடன் குறிப்பிடப்படுகிறான்.

## குயவர்

நெற்சுரநாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சாதனங்களில் ஒன்றான மட்பாண்டம் செய்யும் குயவர்களும் இங்கு வாழ்ந்து வந்துள்ளனர். இவர்கள் இங்குள்ள கல்வெட்டுகளில் வேளாண் என அழைக்கப்படுகின்றனர். இன்றும் இப்பகுதியில் இவர்களை வேளார், வேளாண் எனவே அழைக்கின்றனர். இங்குள்ள கல்வெட்டுகளில் சேந்தன் வேளான், மயிந்தன் வேளான், புரவன் வேளான் போன்ற பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் திருநெற்சுரத்தைச் சேர்ந்தவர்கள். திருநெற்சுரத்தைச்சேர்ந்த தென்னவன் என்ற குயவன், திருநெற்சுரத்துப் பெருங்கோவேளானாகப் பதவி வகித்துள்ளான். இவன் சீலன் தரிவிதி என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றிருந்தான். பெருங்கோவேளான் - குயவர்களுக்கெல்லாம் தலைவன் தலைமைக் குயவன் எனப்பொருள்படும்.

பண்டைய நெற்சுரநாட்டில் ஊர்ச்சபை, பேரூர்ச்சபை, பரிக்கிரகம், நாடுசபை போன்ற நிர்வாக அமைப்புகள் இருந்தன. அண்டை நாடான இருப்பைக்குடி (இருக்கன்குடி, சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்) நாட்டைச் சேர்ந்த மகாசபையான கும்மணமங்கலத்துச் சபையார், நெற்சுரநாட்டு நிர்வாகத்திலும் பங்கேற்றிருந்தனர். வேளாண்மக்களின் குடியிருப்புகளைக் கொண்ட கிராமம் ஊர் எனவும், அவ்வூரின் நிர்வாகத்தை நடத்தி வருகின்ற சபை, ஊர்ச்சபை எனவும் மற்றும் அதன் நிர்வாகிகள் ஊரோம் எனவும் அழைக்கப்பட்டனர். கிராம காரியங்களை நிர்வகித்தல் ஊராட்சி எனவும், கிராமத்தை ஆளுகை செய்கின்ற அதிகாரி ஊராளர் எனவும் படும். இதுவே பேரூராக இருந்தால் பேரூர்ச்சபை, பேரூரோம், பேரூராட்சி, பேரூராளர் என அழைக்கப்பட்டன. நெற்சுரநாட்டில் பெருநெற்சுரத்து ஊர்ச்சபை, திருநெற்சுரத்து பேரூர்ச்சபை, ஊற்றத்தூர் ஊர்ச்சபை, நென்மலி ஊர்ச்சபை போன்ற ஊர்ச்சபைகள் பல இருந்து கிராமங்களை நிர்வகித்து வந்துள்ளன. திருநெற்சுரத்தில் திருநெற்சுரத்துக்கோன் என்ற இடைச்சாதியினர் தலைவனும் திருநெற்சுரத்துப் பெருங்கோ வேளான் என்ற குயவர் இனத்தவர்களின் தலைவனும் இருந்துள்ளனர். சேந்தன் என்பவன் திருநெற்சுரத்தின் குடிதாங்கியாகப் பதவி வகித்துள்ளான். சோழபாண்டியர் ஆட்சியின்போது, நக்கன் துடர்படி என்பவன் பெருநெற்சுரத்து ஊர்க்கணக்காகப் பணிபுரிந்துள்ளான். பிற்காலப் பாண்டிய ராட்சியின்போது, கி.பி.13ஆம் நூற்றாண்டில், நென்மலியான குலசேகரநல்லூர் ஊர்ச்சபை உறுப்பினர்களாக, நிலையுடைய பாண்டியதேவன், உருபநாராயணப் பல்லவரையன்...... சிறியபன்மன், செப்பியதரையன், நரலோகசிங்கதேவன், புவனிசிங்கதேவன், உத்தமபாண்டியதேவன், புவனியபதியன், பரிமேலழகியான், சுந்தரப்பெருமாள், கைவிளங்கு பாண்டியதேவன், ஆலைவாயகந்தான், அபிஷேகப்பெருமாள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். மேலும், நென்மலி ஊரின் கணக்கராக வழுதிய தரையன் என்பான் பணிபுரிந்தான். ஊர்களிலுள்ள திருக்கோயில் திருப்பணிகளை நிர்வகிக்கின்ற

நிர்வாக சபை, பரிக்கிரகம் எனப்பட்டது. நெற்சுரநாட்டு ஊற்றத்தூரில் ஊற்றத்தூர்ப் பரிக்கிரகம் என்ற பெயரில் திருக்கோயில் திருப்பணி நிர்வாகச் சபையொன்று இயங்கி வந்துள்ளது.

நாடு என்னும் பிரிவின் நிர்வாகத்தை நடத்துவதற்காக அமைந்த சபை, நாடு எனவும், நாடு சபை எனவும், அச்சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் நாட்டார் எனவும் படும். நாடு என்னும் பிரிவின் நிர்வாகத்தை நடத்த அமைக்கப்பெற்ற சபைக்குழு, நாடுவாரியம், நாட்டு வாரியம் எனவும் பெறும். நெற்சுரநாட்டில், முற்காலப்பாண்டியராட்சியின்போது, முழுக்க முழுக்க நிலவுடமையாளர்களை-வேளாண் பெருங்குடி மக்களை நிர்வாகிகளாகக் கொண்ட நெற்சுரநாடு சபை செயல்பட்டு வந்துள்ளது. சபையின் தலைமைப் பொறுப்பில் இருந்தவன். நெற்சுரநாடு கிழவன் என அழைக்கப்பட்டான். கொடியன் கண்ணரத்தி என்பவன் நெற்சுரநாடு கிழவனாகப் பதவி வகித்துள்ளான். கொற்றன் கொடியன் என்பவன் இவனது மகன்போலும் தவிர, நெற்சுரநாடுசபையில் அங்கம் வகித்த நிர்வாகிகள், நெற்சுரநாட்டு நாட்டார் என அழைக்கப்பட்டனர். சுந்தரதட்டன் என்பவன், நெற்சுரநாட்டின் சிற்ப ஆசிரியாராக, இருந்துள்ளான். இவன் வகித்த பதவி நெற்சுரநாட்டுப் பெருங்கொல்லன் என அழைக்கப்பட்டு வந்துள்ளது.

11361

கி.பி.10ஆம் நூற்றாண்டில் பாண்டியன் பராந்தக வீரநாராயணன் (கி.பி.866-911) திருமங்கலம், சோமாசிக் குறிச்சி மகாசபையார்களின் வேண்டுகோளுக்கிணங்க, திருமங்கலம் சோமாசிக் குறிச்சி மற்றும் மதுரநல்லூர் ஆகிய மூன்று ஊர்களை ஒன்றாக உடன்கூட்டி பிடி சூழ்வித்துத் தானமாக வழங்கினான். இந்த தானத்தை அரசனின் ஆணைப்படி இளையான் நக்கன் ஆணத்தியாகவும், சேந்தன் கிழவன் என்பான் நடுவுநிலை நாயகனாகவும், சாத்தம்படரான் மற்றும் பெருங்காக்கூர்க்கிழவன் கோன் ஆகிய இருவரும் கணக்குநூல் கணக்கராகவும், மேலே கண்ட இவர்களுடன் ஆசி (ஆசூர்) நாட்டு நாட்டாரும் நெற்சுரநாட்டு நாட்டாரும் உடனாகி நின்று எல்லைகளை வகுத்துக் கொடுத்ததாகத் தளவாய்புரம் செப்பேடு குறிப்பிடுகிறது.

முற்காலப்பாண்டியன் ஆட்சியின்போது, கி.பி.9ஆம் நூற்றாண்டில் எட்டி என்னும் படைத்தலைவன் நெற்சுரநாட்டின் குறுநிலத்தலைவனாக இருந்தான். பெருநெற்சுரத்தில் இந்த எட்டி மன்னனுக்கு அனைத்து வசதிகளும் கொண்ட அரண்மனை யொன்றும் இருந்தது. இந்த அரண்மனையில், படைவீரர்கள் பணியாளர்களாகப் பணிபுரிந்தனர். இந்த குறுநிலத்தலைவனை பெருநெற்சுரத்து எட்டி மன்னனாயினமங்கலஏனாதி என்றும் இவன் அரண்மனைப் பணியாளர்களை உள்வீட்டுக் கோயிற் சேவகர் என்றும் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. பிற்காலப்பாண்டியராட்சியின் போது, கி.பி.13ஆம் நூற்றாண்டில் இராசநாராயணதேவன் என்பவன் நெற்சுரநாட்டின் குறுநிலத்தலைவனாக இருந்துள்ளான். இவனுக்கு நாவிலங்காதான் என்று விருதுப்பெயரும் உண்டு. இவனைப் பாண்டி மண்டலமும் கொண்டான் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. பெருநற்சுரத்துப் பவித்ர மாணிக்கபுரத்து திருவுடை விண்ணகர் எம்பெருமான் திருக்கோயிலில் திருமண்டபம் ஒன்று கட்டுவித்து, அதற்கு இராசநாராயணன் திருமண்டபம் எனப் பெயருமிட்டான். மதுரை நாயக்கர் ஆட்சி தொடங்கி, ஆங்கிலேயர் ஆட்சி முடிவுரை, கி.பி.16ஆம் நூற்றாண்டிலிருந்து, கழுகுமலையையும், அதனைச்சுற்றிலுள்ள கிராமங்களையும் எட்டயபுரம் பாளையக்காரர்களின் எட்டப்ப நாயக்கர் பரம்பரை ஆட்சிபுரிந்து வந்துள்ளது.

இங்ஙனம் இயற்கைவளமும், எழில்வளமும், நீர்வளமும், நிலவளமும், பொருள்வளமும், பணபலமும் பெற்று, எழிலமை நெற்சுரநாடு எனவும், அச்சுறுவளம் அணவிவேந்தன் நெற்சுரநாடு எனவும் வளமிக்க மருதவேலி இளநெற்சுரம் எனவும் செப்பேட்டுச் சாசனத்தால் சிறப்பித்துப் பேசப்படுகின்றது.

பதிப்பாசிரியர்.

## பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116